விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 05 வியாழக்கிழமை (19.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஐ.நா விசாரணை குழுவை அனுமதிக்கப் போவதில்லை

### 134 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பிரேரணை

*இலங்கைக்கு எதிரான யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கப்போவதில்லை என்ற பிரேரணை 134 மேலதிக வாக்குகளினால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப் பட்டுள்ளது.*

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய பிரச்சினைகளை விசாரிக்க, மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக்கூடாது என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேர் பிரேரணையொன்றை சமர்ப்பித்திருந்தனர்.

இந்த பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் பிரேரணை மீதான விவாதம் நேற்று புதன்கிழமையும், நேற்றுமுன்தினம் செவ

20 ஆம் பக்கம் பார்க்க....

### யாழ்.பல்கலையில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் மக்களுக்கு எதிராக கொழும்பு அளுத்கம பகுதியில் இடம்பெற்றிருக்கும் வன்முறைச் சம்பவங்களை கண்டித்து இன்றைய தினம் ஒரு மணிநேர அடையாள கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசியரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை 1948-ம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது தொடங்கி மிகவும் கொடிய இனமுரண்பாட்டு கொள்கைகளையும் அதன் வழியான

19 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று கடையடைப்பு

(கொழும்பு)

களுத்துறை மாவட்டம் பேருவளை மற்றும் அளுத்கம சம்பவங்கள் உட்பட முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள அநேகமான முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று புதன்கிழமை கடையடைப்பு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச் சேனை மற்றும் அக்கரைப்பற்று உட்பட அனைத்து முஸ்லிம் பிரதேசங்களிலும் ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டதால் அந்தப் பிரதேசங்களில் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளியிடங்களுக்கான போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் நெடுஞ்சாலைகளும் வீதிகளும் மக்கள் நடமாட்டங்கள் இன்றி வெறிச்

19 ஆம் பக்கம் பார்க்க....

### முஸ்லிம்கள் இன்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாடளாவிய ரீதியில் ஹர்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலும் இதற்கு ஆதரவு தெரிவித்து முஸ்லிம் மக்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவு தெரிவிக்கவுள்ளனர் என்று

19 ஆம் பக்கம் பார்க்க....



களுத்துறை மாவட்டம், அளுத்கமப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலவரம் மற்றும் வன்செயல் இடம்பெற்ற பகுதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார். பேருவளை பகுதிக்கு சென்றிருந்த அவர், உள்ளூர் சமூகத் தலைவர்களுடன் நடத்திய ஒரு கூட்டத்தில், இச் சம்பவம் தொடர்பில் ஒரு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.



அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினைக் கண்டித்து தமிழ்நாடு திண்டுக்கல் மாவட்டத்தில் முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் போராட்டம் ஒன்றை நடத்தினர். திண்டுக்கல் பஸ் நிலையத்துக்கு அருகில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷமிட்டதுடன் அவரது உருவப் பொம்மையையும் எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## சிறுபான்மையினரை பாதுகாக்கும் வகையில் இலங்கையில் செயற்பாடுகள் அமைய வேண்டும்

### கண்டனத்துடன் வலியுறுத்துகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் குறித்து அமெரிக்கா கவலையுடன் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள மத சிறுபான்மையினரை பாதுகாக்கும் தனது கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின பேச்சாளர் ஜென் பசாகி, முஸ்லிம் மக்கள் மீதான இந்த வன்முறைகள் குறித்து வாஷிங்டன் கவலையடைந்துள்ளது.

மத சிறுபான்மையினர் மற்றும் வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்கும் தனது கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீதான இந்த வன்முறைகள் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற

19 ஆம் பக்கம் பார்க்க....

## கருங்கல் சுரங்கங்களை முதல்வர் குழு பார்வையிட்டது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் தலைமையில் அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் உள்ளிட்ட குழுவினர் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பன்றிவெட்டிப் பகுதியில் அமைந்துள்ள கருங்கற் சுரங்கங்களை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் மற்றும் மல்லாவி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் வடக்கு மாகாண முதல

19 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறை; கண்டித்து யாழ்.நகரில் நாளை போராட்டம்

### த.தே.ம. முன்னணி, த.தே.கூட்டமைப்பு இணை ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

இந்த அரசாங்கத்தினால் தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களை தாம் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து கூட்டாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து நாளை 20ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை யாழ்.நகரில் நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அக்கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா உதவிச் செயலர் ஒஸ்கார் இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஐ.நா.வின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் ஒஸ்கார் பெர்ணாண்டஸ் டிரான்கோ இன்று வியாழக்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.



இலங்கையில்இடம்பெற்ற மூன்று தசாப்தகாலப் போரின் கடைசி ஏழு வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7693)



## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

எதிர்வரும் 22.06.2014 ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் பிற்பகல் 1.30 மணியளவில் மாட்டு வண்டி சவாரிப் போட்டி நடைபெற இருப்பதனால் இதில் சகல போட்டியாளர்களையும் பார்வையாளர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



(C-7695)

உறுப்பினர்கள்
மூர்த்தி,குணசிங்கம்





## கடை இடமாற்றம்



1972 இல் திரையிடப்பட்டு 1 வருடம் ஓடி மக்கள் பார்த்த தொகையிலும் சரி, வசூலிலும் சரி இன்று வரை முறியடிக்க முடியாத பல சாதனைகளை ஏற்படுத்திய வசந்தமாளிகை புகழ் வெலிங்டன் திரையரங்கு முன்பாக 1962 ஆம் ஆண்டு முதல் இயங்கி பின் இல.546, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம் தற்போது O.P.D முன்பாக இல.516, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தங்கள் சேவையினை மேற்கொண்டு வருகின்றோம் என்பதனை எங்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்
தொ.பே: 021 222 7893

(6785)



Hatton National Bank
Hatton National Bank PLC (PQ82)

## அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, வேலணை, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முல்லைத்தீவு, முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 31.05.2013 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 23.06.2014 தொடக்கம் 03.07.2014 (திங்கள் – வியாழன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 06.00 வரை இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி (C-7698)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532


# முஸ்லிம்களை எதிரிகளாக ஒரு போதும் நினைக்கவில்லை

## குற்றச்சாட்டுக்களை மறுக்கிறது பொது பல சேனா

பொது பல சேனா இனவாத அமைப்பு அல்ல. புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் செயற்பட வேண்டிய தேவையும் எமக்கில்லை. முஸ்லிம்களை ஒருபோதும் எதிரிகளாக நாம் நினைக்கவில்லை என்று பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் பொது பல சேனா பௌத்த அமைப்பு செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ள நிலையில் அது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நாம் இனவாத அமைப்பென்று பலர் சுட்டிக்காட்டுகின்றனர். சிறுபான்மை மக்களை அடக்கவோ, முஸ்லிம்களை அழிக்கவோ நாம் ஒருபோதும் முயற்சிக்கவில்லை. எமது நோக்கம் பௌத்த மதத்தை காப்பாற்ற வேண்டும் என்பதேயாகும்.

அதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம். அதே போல் எம்மை அரசாங்கத்தின் பங்காளிகள் எனவும் அரசாங்கத்தின் அடியாட்களெனவும் தற்போது நாம் புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் செயற்படுவதாகவும் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

யாருடைய தயவுடனும் செயற்பட வேண்டுமென்ற தேவை எமக்கு இல்லை. தவறான கருத்துகளைப் பரப்பி எமது கொள்கையினையும் பொது பல சேனா பௌத்த அமைப்பினையும் கொச்சைப்படுத்த வேண்டாம்.

ஒருபோதும் நாம் முஸ்லிம் இனத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தியதில்லை. முஸ்லிம்கள் செய்யும் மிகப் பெரிய தவறுகளை சுட்டிக் காட்டியுள்ளோம். நாட்டிற்கு எதிராக அவர்கள் செயற்படும்போது எதிர்த்துள்ளோம். இவை அனைத்தும் குறித்த ஒரு சில முஸ்லிம் அமைப்புகளுக்கு எதிரானதே தவிர அனைத்து முஸ்லிம்களுக்கும் எதிரானதல்ல. அளுத்கம சம்பவத்தில் நாம் அமைதியாக செயற்பட்டும் முஸ்லிம்களே வன்முறையினை கையாண்டனர். இதற்கு சிங்கள மக்கள் விரும்பாத நிலையில் அப்பகுதி கலவர பூமியாக மாறியது.

இதில் எம்மீது குற்றம் சுமத்தி முழுக் குற்றத்திற்கும் எம்மை பொறுப்பாக்கி விடக்கூடாது. நாம் முஸ்லிம் சமூகத்தை வெறுக்கவில்லை. அவர்களும் இந்நாட்டின் மக்களே. அவர்களை தண்டிக்க ஒரு போதும் நாம் விரும்பவில்லை. எனினும், மத்திய கிழக்கின் முஸ்லிம் மதவாத தீவிரவாதிகளின் ஊடுருவல் தற்போது இலங்கைக்குள் பரவிவிட்டது. அதன் விளைவாகவே இவ்வாறான இன முரண்பாடுகள் ஏற்படுகின்றது.

முஸ்லிம்கள் தமது உரிமைகளை அனுபவித்து வாழ்வதை நாம் தடுக்கவில்லை. எனினும், சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதை எப்போதுமே நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஊடகங்கள் எம்மீதான தவறான பார்வையில் செயற்படுமாயின் அது மக்கள் மத்தியில் எம்மை தவறானதொரு அமைப்பாக மாற்றிவிடும். குறிப்பாக முஸ்லிம் ஊடகங்கள் எமது செயற்பாடுகளை தவறாகவே சித்திரிக்கின்றது.

இது இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம்கள் மனதிலும் எம்மை மோசமானவர்களாக கொண்டு சென்றுவிட்டது. எனவே, அதையும் ஊடகங்களே சரி செய்ய வேண்டும். இல்லையேல் நாம் நல்லதைச் செய்தால் அதை மக்கள் தவறாகவே எடுத்துக் கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவத்தால்

# ஊரடங்கு தளர்த்தப்பட்ட போதிலும் வீடுகளுக்கு செல்ல மக்கள் அச்சம்

(கொழும்பு)

அளுத்கம பகுதியில் நேற்றுக் காலை முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள போதிலும் பொதுமக்கள் வீடுகளுக்குச் செல்ல அச்சப்படுகின்றனர்.

தென்னிலங்கை அளுத்கமவில் கடந்த ஞாயிறு தொடக்கம் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதன் எதிரொலியாக மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டு சுமார் நாற்பது வர்த்தக நிலையங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இரண்டு பள்ளிவாசல்கள் தாக்கியழிக்கப்பட்டு, மேலும் மூன்று பள்ளிவாசல்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் பொலிசாரும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையை கட்டவிழ்த்துவிட்ட பொது பல சேனாவினருக்கு ஆதரவான நிலைப்பாட்டில் நடந்து கொண்டனர்.

இதனால் வன்முறை தீவிரமாகப் பரவியதை அடுத்து விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டனர். ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

மேலும் புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் மற்றும் சர்வதேச ஊடகங்களின் செய்தியறிக்கைகள் காரணமாக இலங்கை அரசாங்கம் கடும் நெருக்கடியை எதிர்கொண்டது. இதன் காரணமாக கடும் பிரயத்தனத்தின் மத்தியில் தற்போது அளுத்கம வன்முறைகள் தணிக்கப்பட்டு, பாதுகாவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக நேற்று காலை எட்டு மணி முதல் அளுத்கம பிரதேசத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. எனினும் வன்முறை காரணமாக வீடுகளை இழந்தவர்களும், வன்முறைக்கு அஞ்சி பள்ளிவாசல்களில் தஞ்சம் அடைந்தவர்களுமாக சுமார் ஆறாயிரம் மக்கள் இன்னும் அகதிகளாக இருப்பதாக தெரிய வந்துள்ளது.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் காரணமாக 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் பள்ளி வாசல்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் மக்கள் கடந்த இரண்டு தினங்களாக பாடசாலை மற்றும் பள்ளிவாசல்களில் தஞ்சமடைந்திருந்ததுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு தஞ்சமடைந்திருந்த முஸ்லிம் மக்களுக்கான உணவுகள் வெளிப் பிரதேசங்களில் இருந்து வரவழைத்து விநியோகிக்கப்பட்டன.

எவ்வாறாயினும் அளுத்கம நகரில் கடந்த இரண்டு தினங்களாக அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 8 மணிக்கு நீக்கப்பட்டதாக பொலிஸ ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது. (செ-11)


## காணி குத்தகைக்குத் தேவை

நீண்டகால குத்தகை அடிப்படையில் விவசாயப் பண்ணை ஒன்றை உருவாக்க 10 ஏக்கர் காணி தேவை.

தொடர்புகள்:
தொ.பே : 0772242394
60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(6794)


## கண்ணீர் அஞ்சலி




இரவீந்திரன் சுகிர்துன்
[சுகிர்]

புன்னகையுடன் பூத்த உன் முகம்
புதுப் பொலிவுடனே புதுப்புது
கனவுகளை சொல்லிச் செல்ல
காலவனும் உன் கனவுகளை
கச்சிதமாய் செய்திட கால
அவகாசம் தராமல் போனதேனோ?
புலம்பி அழுகிறோம் உன் பிரிவால்
வேண்டுகிறோம் இறைவனிடம்
சொர்க்கத்தில் உன்னை சந்தித்திட...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் வடக்கு,
சிறிவாகேஸ்வரி வீதி,
கோண்டாவில்.

இவ்வண்ணம்
சி.ஜெயக்கொடி குடும்பம்.

(C-7696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் போடும் புள்ளடி ஒவ்வொன்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்

## ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன்



அரசுடன் பேசுவதை நாம் எவ்வளவு தூரம் தள்ளிப்போடுகின்றோமோ அந்தளவுக்கு எமது நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான படிமுறைகளும் பின்நோக்கி சென்று கொண்டிருக்கும் என்பதே உண்மை.

கடந்த காலத்தில் நமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இன்று அபிவிருத்தியுடன் கூடிய அரசியல் சுயநிர்ணய உரிமைகளை பெற்று வாழ்ந்திருக்க முடியும் என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்தார்.

உடுவில் ஆக்லேன் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் வாக்களிக்கும் போது போடும் ஒரு வாக்கும் எத்தனை மாற்றத்தை கொண்டுவரும் என்பதை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் உங்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் புள்ளடியாக பதியப்பட வேண்டுமே தவிர வாழ்நாள் முழுவதும் அழிக்கப்பட முடியாத புள்ளடியாக இருந்துவிடக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

நாங்கள் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது பற்றி பலர் பலவாறு பேசுகின்றார்கள். ஆனால் அந்தச் சின்னத்தில் போட்டியிட்டு உங்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் தான் உங்களுக்கான அனைத்து தேவைகளையும் பாரபட்சமற்ற வகையில் செய்து வருகின்றோம்.

நிரந்தர தீர்வு வந்துவிட்டால் மக்களுக்கு சேவை செய்தவர்கள் தேர்தல்களில் வென்றுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே வருகின்ற தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வுகளையெல்லாம் தட்டிக் கழிக்கின்றார்கள் தமிழ்த்தேசிய வாதிகள்.

ஆனால் ஈழப் போராட்டத்தில் பங்கு கொண்ட போராளிகள் பலர் இன்று வாழ்விழந்தும், கணவனை இழந்தவர்களாகவும், அநாதைகளாகவும் இருந்து அனுபவிக்கும் வேதனைகளை தமிழ்த்தேசியம் பேசுபவர்கள் கண்டுகொள்வது கிடையாது.

1977இல் இருந்து இன்றுவரை அழுக்குப் படிந்த தேசியத்தை பேசுபவர்களால் ஈழத்து மக்கள் இன்று வரை ஏமாற்றப்பட்டுத்தான் வருகின்றார்கள் என்றார். (அ)

# வாள்வெட்டுச் சம்பவங்களை விசாரிக்க விசேட புலனாய்வுக்குழு நியமனம்

## பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு விசேட புலனாய்வுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.கோண்டாவிலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தை அடுத்தே யாழ்.பொலிஸார் நேற்றைய தினம் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யாழ்.கோண்டாவில் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் மாணவனொருவன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளான்.

இவ்வாறு யாழில் தற்போது வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்டு உள்ளதோடு கொள்ளை, கொலைச் சம்பவங்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் குற்றவாளிகளை இனங்காணும் பொருட்டும் அமைதி நிலையை பேணுவதற்கு விசேட புலனாய்வுக் குழு ஒன்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடி கண்காணிப்பில் களமிறக்கப்பட்டுள்ளது.

இக்குழு வாள்கள் தயாரிக்குமிடங்கள், அவற்றை பெற்றுக்கொள்பவர்களை இனங்கண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இவ்வாறான புலனாய்வுக் குழு ஏற்கனவே இயங்கி வருகின்ற நிலையிலும் தற்போது நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு இவ் விடேச புலனாய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றனர்.

கோப்பாய் மற்றும் யாழ்.பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் இவ் விடயம் தொடர்பில் அறிவித்த போதிலும் உடனடியாக அவர்கள் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டனர் எனவும் உயிரிழந்த மாணவனின் தரப்பினர் தெரிவிக்கின்றனர். (4)

# வலிகாமம் கல்வி வலயத்திற்கு உ.க.பணிப்பாளர்கள் நியமனம்

வலிகாமம் கல்வி வலயத்திற்கு 4 பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்களை வடமாகாண கல்வி அமைச்சு நியமித்துள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராசா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் 10 பாடங்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான காடர் (பணியாற்றுவதற்கான அனுமதி) காணப்பட்டபோதிலும் இதுவரையில் 6 பாடங்களுக்கான உதவி பணிப்பாளர்களே கடமையாற்றி வந்தனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியதை அடுத்து 4 பாடங்களுக்குமான உதவிக் கல்விப் பணிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு கடந்த வருடம் வடமாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதனடிப்படையில் பரிசீலனைகள் செய்யப்பட்டு தற்போது 4 பாடங்களுக்கும் உதவிக் கல்வி பணிப்பாளர்கள் இம்மாதத் தொடக்கத்தில் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் உடற்கல்விப் பாடத்திற்கு திருமதி கோசலை குணபாலசிங்கமும் சமூக விஞ்ஞான பாடத்திற்கு லதீஸ்கிறேஸ் விக்டர் ஜெயக்குமாரும் வர்த்தக பாடத்திற்கு தில்லையம்பலம் உதயகுமாரும் முறைசாரா கல்விப் பாடத்திற்கு கே.கனகேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய போட்டி முடிபுகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிமுடிபுகளை பிரதேசசெயலாளர் ச.சிவசிறி அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**பாலர் பிரிவு (கவிதைப்பாடல்)**

நவநேசன் அருண்யா-(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), முகுந்தன் அஸ்விகா -(யா/கரவெட்டி மாணிக்தவாசகர் வித்தி.), (இருவர் மூன்றாம் இடம்) கவிதரன் கம்சினி-(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), தர்மராஜா பிரவிணா-(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.).

**கையெழுத்துப் போட்டி**

கவிதரன் கம்சினி-(யர்/கர வெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), ரவிச்சந்திரன் நிலாவிழி -(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.)(இருவர் மூன்றாம் இடம்) பாஸ்கரன் செம்பூவினி -(யா/நெல்லியடி மெ.மி.த. க.பா.), சந்திரகுமாரன் ஹரிகிருஷ்ணி -(யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.).

**கவிதைப் போட்டி**

லக்ஷலா சிவராசா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தாட்சாயினி புஸ்பராஜா -(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.சோபிகா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

பவித்திரா பேரம்பலம் -(யா/வதிரி திரு இருதயக் கல்லூரி), நிதர்சனா தேவராஜா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜம்சனா சிறந்தகுமார் -(யா/வதிரி திரு இருதயக் கல்லூரி).

**கவிதைப் பாடல்**

சன்சிகா சிவகாந்தன் -(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மதுரா மகேசன் -(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), திகல்யா விமலநாதன் -(யா/வட மராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு கவிதைப் போட்டி**

சங்குலக்ஸ்மி கனகநாயகம் -(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.உமா-(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), கௌரிசா சாந்தராசா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

மதுமிதா தங்கராசா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), புஸ்பமதி இராசதுரை -(ஸ்ரீ பரமானந்தா அறநெறி பா.), சுகன்யா சிவானந்தன் -(யா/நெல்லியடி மத்திய கல்லூரி).

**கவிதைப் பாடல்**

ம.கிருஷாந்தி -(யா/வட மராட்சி மத்திய மகளிர் கல்லூரி), துமிலுஷா சண்முகராசா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பிரிந்திகா தவராஜ் -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**பாடல் நயத்தல் போட்டி**

இ.உமா -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சகானா சக்திவேல் -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மிதுர்சினி குருகுலசிங்கம் -(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி). (தொடரும்) (அ-60)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கமைய ஒவ்வொரு நாள் வேலைத்திட்டதிற்கும் பிரதேச சபையினால் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமைக்குரிய வேலைத்திட்டங்களாக ஒளிராத மின் விளக்குகளை சீர் செய்தல், சபை ஊழியர் மூலம் மயானம் துப்புரவு செய்தல் மற்றும் குளங்கள், வாய்க்கால்கள், துப்புரவு செய்தல் என்பனவும் நாளை வெள்ளிக்கிழமைக்குரிய வேலைத்திட்டங்களாக மரம் நடுகைத்திட்டம் மற்றும் பார்த்தீனியம் ஒழித்தல் என்பனவும் நாளை மறுதினம் சனிக்கிழமை சனசமூக நிலையங்களுக்கான வேலைத்திட்டம், நூலகங்களுக்கான நூல்களை அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளல், சிதைவடைந்த நூல்களை கட்டுதல் மற்றும் முன்பள்ளிகளின் செயற்பாட்டினை ஊக்குவித்தல் என்பன இடம்பெறும். இறுதி நாள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி விளையாட்டுப் போட்டி, பரிசில் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளன என வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை அறிவித்துள்ளது. (அ-60)

# இராசி பலன்

19.06.2014

(ஆனி 05, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
சப்தமி மாலை 6.13 மணி வரை
பூரட்டாதி பின்னிரவு 3.22 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54 மணிவரை
சுபநேரம் 7.24-8.54 மணிவரை

வளவன்

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர். சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலையாட்களிடம் போராடி வேலையை முடிப்பீர்கள், உங்களின் செயற்பாடுகளில் பெரியவர்கள் குறை கண்டு கூறலாம்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும.

**கன்னி:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், உடல் நலனில் உற்சாகம் பிறக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், புண்ணிய காரியங்களில் [illegible] காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, [illegible] காட்டுவீர்கள்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், சுவாரஸ்யமான நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மீனம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தூரதேசச் செய்தி ஆச்சரியப் படவைக்கும், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல வழியாக நடைபெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பேரவை நடத்தும் கலாசார பெருவிழா நாளை

(மானிப்பாய்)


தென் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலாசாரப் பெருவிழா நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரம ணியம் முரளிதரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்குபிரதமவிருந்தினராகயாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி.உஷா சுபலிங்கம், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதப்பிள்ளை குமரன், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டி.எஜ். றொகான் மகேஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி இராஜேந்திரன் வசந்த சேனன், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இதன் போது கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. கலைஞர்கள் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது.

இதில் தவில் கலைஞர் சதுமலை சட்டையாபிள்ளை நடராஜசுந்தரம் நாட்டுக்கூத்து துறைக்காக மாதகல் சூசை அகஸ்ரீன், மாதகல் சூசைப் பிள்ளை முத்துராசா, நடனத்துறை க்காக மானிப்பாய் மயில் வாகனம் றோகினி, நாடகத்துறைக்காக மானிப்பாய் சந்திரகுமார் நிதர்சன் நவாலியூர் செல்லையா உதயச் சந்திரன், சிறுவிளான் சரவணமுத்து சிவராசா, இசைத்துறைக்காக மானிப்பாய் சந்திரிக்கா கணேஸபரன், ஆலங்குழாய் முருகையா ஆனந்தநடராசா ஆகியோர் கௌரவிக்கப்பட வுள்ளனர்.

மேலும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டிலே கலாபூஷணம் விருது பெற்றவர் களுக்காக பாராட்டும் இடம்பெறவுள்ளது. (அ-23)



நன்றி-மிரர்

# யாழ். இந்தியத்துணை தூதரகத்திடம் மு.த.தே.கட்சி மகஜர் கையளித்தது

## மூன்று கோரிக்கைகள் முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் மீனவர்கள் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியினால் பாதிக்கப்படுவது தொடர்பிலும், இந்திய அரசாங்கம் 10 ஆயிரம் வீடுகளை வடபகுதியில் அமைத்துக் கொடுக்கவேண்டும் உள்ளிட்ட மூன்று முக்கிய கோரிக்கையினை முன்வைத்து இந்திய பிரதமர் தாமோதரதாஸ் நரேந்திர மோடிக்கு முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் யாழ்.இந்தியத்துணைத்தூதரகம் ஊடாக மகஜர் ஒன்றை நேற்றுக்காலை அனுப்பிவைத்துள்ளார்.



முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சியின் ஏற்பாட்டில் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்.கைலாசப்பிள்ளையார் கோவில் முன்பாக ஆரம்பமான பேரணி யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தினை நோக்கி சென்றது.

இந்நிலையில் இந்தியத்துணைத்தூதரகத்தின் உதவித்துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தியிடம் விஜயகாந்தினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில்,

இலங்கையின் வட பகுதியில் வாழும் தமிழ் மீனவ மக்களின் வாழ்வாதாரம் இந்திய மீனவர்களின் சட்ட விரோதமான மீன்பிடியால் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் 30 வருடங்களிற்கு மேற்பட்ட முரண்பட்ட சூழ்நிலைக்குப் பின்னர் எமது தமிழ் மீனவர்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர்.

அவ்வேளையில் இவ்வாறான இந்திய சகோதரர்களின் அத்துமீறிய சட்ட விரோத மீன்பிடி நொந்து போன எமது தமிழ் மக்களிற்கு மேலும் வலியை ஏற்படுத்துகின்றது.

கடந்த இரண்டு வருட காலப் பகுதிகளில் கிட்டத்தட்ட 132 மீனவப்படகுகளும் 588 இற்கும் மேலான மீனவர்களும் இலங்கை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு 15 தடவைக்கு மேலாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

எனவே இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்கள் எமது மீனவர்களிற்கும் தென் இந்திய மீனவர்களிற்குமான நட்புக்கு பாதகமான ஓர் நிலையை தோற்றுவித்துள்ளது.

ஆகவே இலங்கை - இந்திய கடலோர எல்லைப் பாதுகாப்பினை பலப்படுத்தி இவ்வாறான சட்ட விரோத மீன்பிடிப்பினை நிறுத்தி எம் வட பகுதி மீனவர்களின் வாழ்க்கையை செழிப்படைய செய்யுங்கள்.

யுத்தத்திற்கு பின்னர் இந்திய அரசால் வடக்கு மற்றும் கிழக்கில் 50ஆயிரம் வீடுகள் கட்டும்பணி நடைமுறைப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் மேலும் 10ஆயிரம் வீடுகளை யுத்தத்தினால் மிகவும் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும்முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு அமைத்து தருமாறு பிரதம மந்திரியிடம் வேண்டிக்கொள்கின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக ஈழத்தமிழருக்கான அரசியல் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் இன்றுவரை தமிழ் மக்களின் சுயநிர்ணயப் பிரச்சினை தீராப்பிரச்சினையாகவே காணப்படுகிறது.

எமது கட்சியின் நிலைப்பாடாக 13ஆவது திருத்தச் சட்டத்தில் இலங்கை வாழ் தமிழருக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் திருப்தியின்மை காணப்பட்டாலும் குறைந்த பட்சமேனும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை மக்களினதும் சுயநிர்ணய உரிமைக்கு வித்திடும் என்பதால் அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பிரதமமந்திரி இலங்கை அரசிற்கு மிகுந்த அழுத்தத்தை கொடுத்து இச்சட்டத்தை அமுல்படுத்த ஆவன செய்யுமாறு நாங்கள் தங்களை வேண்டி நிற்கின்றோம் என அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பேரணியை இந்தியத்துணைத் தூதரகம் நோக்கி செல்ல விடாது மருதடி வீதிச்சந்தியில் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் வைத்து தடுத்த பொலிஸார் அக்கட்சியின் ஐவரை மட்டும் அவ் வீதியூடாக பயணிக்கவும் இந்திய தூதரகம் செல்லவும் அனுமதித்திருந்தனர்.

இதேவேளை தூதரகத்திற்குள் இருவரை மட்டுமே உட்செல்ல அனுமதித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சித்தம்அழகியார் நிகழ்வு

(தும்பளை)

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானலயத்தின் ஏற்பாட்டில் சித்தம்அழகியார் எனும் நிகழ்வு தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இதற்கமைய இதன் 7 ஆவது நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் செம்மொழி ஆய்வு மையத்தின் பேராசிரியர் ஜெ.அரங்கராஜ் தமிழர்களின் மக்கள் பெயரும் இடப் பெயரும் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

எனவே ஆர்வமுள்ள அனைவரும் இந்நிகழ்வில் கலந்து பயனடையுமாறு ஞானலயத்தின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-19)




# யாழ்.மத்தியஸ்தர் சபை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபையால் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யா/வைத்தீஸ்வரா கல்லூரியில் நடத்தப்படவிருந்த வழக்குகள் பெருமாள் கோவிலுக்கு முன்பாகவுள்ள சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தாக தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் வைத்தீஸ்வரா கல்லூரி பரீட்சை நிலையமாக செயற்படவுள்ளதால் வழக்குகள் மேற்படி பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (அ)

# அலங்கார உற்சவம்

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசாமி ஆலய (முனிகோவில்) அலங்கார உற்சவம் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை வெள்ளிக்கிழமை பகல் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண நிகழ்வுடன் சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். அத்துடன் அன்றைய தினம் சைவ சமயப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)




வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி திட்ட வாழ்வெழுச்சி நிகழ்வுகள் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேந்திரன் கரவெட்டி சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு விருது வழங்குவதையும் அருகில் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை குழுவை அனுமதிப்பது குறித்த விவாதம் தேவையற்றது

## கரு எம்.பி. தெரிவிப்பு

ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்ட விடயமொன்றுக்காக நாடாளுமன்றில் விவாதம் நடத்துவதில் அர்த்தமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசப் பற்றாளர் என பெயர்ப் பலகை இட்டுக் கொள்ளாவிட்டாலும் நாமும் தேசத்தின மீது பற்றுடையவர்களே. நாடு பற்றிய உணர்வு எமக்கும காணப்படுகின்றது. ஐக்கிய தேசியக்கட்சியின்எவரும்நாட் டுக்கு எதிராக செயற்பட்டதில்லை.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

இராஜதந்திர ரீதியில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் நிலையில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைக் குழுவினரை நாட்டுக்குள் அனுமதிபபதா இல்லையா? என நாடாளுமன்றில் விவாதித்து, வாக கெடுப்புக்கு விடுவது அவசியமற்றது. (அ)

# உயிர்ச்சேதம் பற்றிய மெய்யான தகவலை ஐ.நா. வெளியிடவில்லை

(கொழும்பு)



யுத்த உயிர்ச்சேதங்கள் பற்றிய மெய்யான தகவல்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிடவில்லை என பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குற்றம் சுமத்திய போதிலும், மெய்யான தகவல்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. 2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வரையில் 7ஆயிரத்து 721 பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான காரியாலயம மதிப்பீடு செய்துள்ளது.

இந்த மதிப்பீடுகளின் பின்னர் ஆறு நாட்கள் மட்டுமே யுத்தம் நடைபெற்றது.

இதே அறிக்கையில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 479 என குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்தத்தில் காயமடைந்த மற்றும் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு சொந்தக் கிளைக் காரியாலயத்தின் அறிக்கையை உதாசீனம் செய்ய முடியாது. பாரியளவில் மனிதப் படுகொலைகளை செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருந்தால் இறுதி நேரம் வரையிலும் வடக்கிற்கு அரசாங்கம் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைத்திருக்காது என்றார். (அ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 29.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: ACCA, Banking Diploma / வங்கியாளர்<br>தொ.இ: B/3277 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 67 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/2088 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 34.25 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Hardware & Network Engineering / தொழில்நுட்பவியலாளர்<br>தொ.இ: B/3278 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2093 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 24.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் O/L/ நடன ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: நடன ஆசிரியர்<br>தொ.இ: B/3280 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 47<br>உயரம்: 161 cm<br>தகைமை/தொழில்: AAT<br>தொ.இ: G/2095 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 32 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம்<br>தொ.இ: B/3281 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 14 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2097 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 31.05.1946

உதிர்வு: 29.06.2013



ஆல விருட்சம் போல் வேரூன்றி விழுது விட்டு கிளை பரப்பி நிழல் தந்த எங்கள் அருமைத் தந்தையே! விதி என்னும் அந்த இரண்டெழுத்து உங்களை வேரோடு சாய்த்து ஓராண்டு ஆனதுவே அப்பா

தரணியிலே நாம் வாழ தக்கவழி காட்டி சீராக வாழ வைத்த எங்கள் ஆருயிர் அப்பாவே! எங்கள் உள்ளத்தோடு ஒன்றிவிட்ட உங்கள் நினைவுகள் எங்கள் உயிருள்ளவரை நிலைத்திருக்கும் அப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள் பேரப்பிள்ளைகள்
மூன்றாம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

## அமரர் திரு. செல்லத்துரை திருச்செல்வம்

(சி-7692)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம வன்முறை இனவாதத்தின் அடுத்த அத்தியாயம்- து.ரவிகரன்

(யாழ்ப்பாணம்)

அளுத்கம தர்கா நகரில் நடைபெற்ற தாக்குதலானது இனவாத அடக்குமுறையின் அடுத்த அத்தியாயமே என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியத்தமிழர்களுக் கெதிராக கட்டவிழ்த்துவிடப்படும் இவ்வாறான அடக்குமுறைகளுக் கெதிராக எங்களின் குரல் என்றும் ஒலிக்கும் என்று தெரிவித்த ரவிகரன் தமிழ்த் தேசிய பாதையில் உரிமைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இஸ்லாமியத் தமிழர்களும் தலைமைகளும் எம்முடன் ஒன்றிணைந்து திரண்ட சக்தியாக போராடுவதே எம் மீதான அடக்கு முறைகளை வீழ்த்துவதற்கான தகுந்த வழியாகும் என்று மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இஸ்லாமியத் தமிழர்களுக் கெதிராக அளுத்கம தர்கா நகரில் நடை பெற்ற கலவரத்தை தொடர்ந்து தீவின் பல்வேறு பகுதிகளிலும் இஸ்லாமியத்தமிழ்மக்களும் வழிபாடிடங்களும் தாக்கப்படுதல் இனவாத அடக்குமுறையின் அடுத்த அத்தியாயமாகவே அமைகிறது.

காலங்காலமாக தமிழர்களுக் கெதிராகவும் பௌத்தம் தவிர்ந்த மதங்களுக்கெதிராகவும் அடக்கு முறைகள் ஏவப்பட்ட வண்ணமே உள்ளன.

இவ்வாறான அடக்கு முறைகளையும்கலவரங்களையும்இலங்கை அரசு கட்டுப்படுத்த தவறுவது இலங்கை அரசு எம்மவர்களின் உரிமைகளையும் இறையாண்மையும் மெல்ல மெல்ல அழித்து வருவதையே வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

தற்போது கடும் அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட இஸ்லாமிய தமிழ் சகோதரர்களுக்காக எமது குரல் வலுவாக ஒலிக்கும் என்பதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்காக முஸ்லிம் அரசியல் தலைமைகள் எவ்வாறு செயற்படப்போகிறார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கிறோம்.

தொடர்ந்தும் பதவிகளுக்காக தமது மக்களின் உரிமைகளை அவர்கள் பணயம் வைப்பார்களா என்கிற கேள்வி எழுகிறது.

தமிழ்த்தேசிய பாதையில் உரிமைப்போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இஸ்லாமியத் தமிழர்களும் தலைமைகளும் எம்முடன் ஒன்றிணைய வேண்டும்.

நாம் திரண்ட சக்தியாக போராடுவதே எம் மீதான அடக்கு முறைகளை வீழ்த்துவதற்கான தகுந்த வழியாகும். அதுவே எதிர்காலத்தில் எம்முடைய நிலையான இருப்பையும் உறுதிப்படுத்தும் என்றார். (6)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வார நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகத்திலுள்ள பொது நூலகத்தில் பொதுநூலகர் வே.வித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வை சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்3 நாட்களும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கலந்து இக்கண்காட்சியைப் பார்வையிட்டதுடன் புத்தகக் கொள்வனவையும் மேற்கொள்ளலாம் என சாவகச்சேரி நகராட்சி மன்றம் அறிவித்துள்ளது. (அ-29)



வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் உள்ள க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான புதிய தொழில் நுட்பப்பிரிவுகள் கதிர் கல்வி நிலையத்தில் இடம் பெற்றது. இதன்போது புதிய கல்வி நிறுவனத்தின் பெயர்ப்பலகையை புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபர் இ.இராஜ மகேந்திரன் திறந்து வைத்துள்ளமையை படத்தில் காணலாம்.

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120-160 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 320 |
| தக்காளி | 210 | 180 | 190 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 140 | 130 | 130 | 160 |
| கரட் | 200 | 180 | 180 | 200 |
| பூசணி | 60 | 60 | 70 | 70 |
| புடோல் | 60 | 80 | 65 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-130 | 80 | 120 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 160 | 210 | 240 |
| முருங்கைக்காய் | 100-180 | 200 | 280 | 160 |
| போஞ்சி | 140 | 180 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 80-130 | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 10-35 | 30 | 35 | 25-35 |
| இராசவள்ளி | 100 | 100 | 110 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 49

கரோலின் கெனி

இன்பத்தை INBOX இல் வை...!
கவலையை OUTBOX இல் வை...!
புன்னகையை SENT பண்ணு...!
கோபத்தை DELETE பண்ணு...!
மனதை VIBRATE செய்து பார்...!
வாழ்க்கை தானாக
RING TONE ஆக மாறும்...

அற்புதராஜா முகேஷ்ராம்





சர்மிலா சிவராஜா




தயாபரன் உதயசங்கர்




குமாரதாசன் குமாரசாமி




பிந்து பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. சபை வழங்கிய சந்தர்ப்பங்களை இலங்கை அரசு உதாசீனப்படுத்தியது

## விசாரணைக்குழு வருகைக்கு இதுவே காரணம்

இலங்கை அரசு ஐ.நா. சபை பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாததன் காரணத்தினாலும்ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவை நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும்படி கோரி வழங்கிய சந்தர்ப்பத்தை உதாசீன படுத்தியதன் காரணத்தினாலும் ஐ.நா. விசாரணைக்குழுவை அமை க்க வேண்டி ஏற்பட்டது என த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். ஐ.நா. விசாரணை குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயத்தில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருகின்றமை ஒரு மலிவான அரசியல் சாதுரியம் அல்லாமல் வேறில்லை என்பது முழு நாட்டுக்குமே வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

பரிசீலனையில் உள்ள இந்த விசாரணைக்கு நாட்டின் "ஒத்துழைப்பின்மையை" ஜெனீவாவில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஏற்கனவே அறிவித்துவிட்டார். அப்படியாயின் நாடாளுமன்றில் இந்தச் செயற்பாட்டின் நோக்கம் என்ன? தன்னுடைய தனிமைப்படுத்தப்பட்ட கொள்கையினால் அரசு அவ்வளவுக்குப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதா? அதனால்தான் பழியை நாடாளுமன்றம் மீதும் பகிர்ந்து சுமத்தவும் வெளிநாட்டில் உள்ள அரசுப் பிரதிநிதியின் இழிந்த அறிவிப்புக்கான றப்பர் ஸ்டாம்ப் ஆக நாடாளுமன்றததை மாற்றவும் அது முயல்கின்றதா?

எங்களின் முன்னால் உள்ள இந்தப் பிரேரணை மீள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் அரசாங்கத்தின் அணுகுமுறைப் போக்கின் பண்பியல்பாக அமையும் அர்ப்பத்தனத்தை விளக்கி நிற்கின்றது. இந்தப் பிரேரணை "மனிதவுரிமைகள் ஆணைக்குழு"வின் ஒரு தீர்மானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனினும் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் இடத்துக்கு மனிதவுரிமைகள் கவுன்ஸில் வந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டன.

மேலும் இந்தப் பிரேரணை, கவுன்ஸிலின் தீர்மானத்தை "இலங்கை எதிரான" ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் அந்தத் தீர்மானம் "இலங்கையின் இறைமை, சுதந்திரம், ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவை மீதான கவுன்ஸிலின் அர்ப்பணிப்பை உறுதியுரைப்பதாக" குறிப்பிட்டிருந்தது.

அப்படியிருக்கையில், அரசு எவ்வாறு அதனை நாட்டுக்கு "எதிரான" தீர்மானம் என்று தெரிவிக்க முடியும்? அந்த விடயத்தில் அரசாங்கத்தின் தர்க்கத்தின் அடிப்படையில் நான் ஒரு கேள்வியை எழுப்ப விழைகிறேன். 2009 மே 26 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் சேர்ந்து தாம் விடுத்த ஒரு கூட்டு அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்ததன் மூலம் ஜனாதிபதியும் "நாட்டுக்கு எதிராக" நடந்து கொண்டிருக்கின்றாரா? அந்தக் கூட்டறிக்கையில்,

"சர்வதேச மனிதாபிமான, மனவுரிமைச் சட்ட மீறல்களைக் கவனிப்பதற்கான பொறுப்புக் கூறும் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம்வலியுறுத்தினார்." அதற்கு ஜனாதிபதி ஓர் உறுதி வழங்கினார்.

"அந்த ஆதங்கங்களைக் கவனிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்."

யுத்தத்தின்போது இரு தரப்புகளினாலும் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறலும் நீதியும் சர்வதேச மயப்படுத்தப்பட்டன என்ற விவகாரம் அரசினாலும், ஜனாதிபதியினாலும் 2009 மே இல் பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவினால் நேர்ந்தது.

அந்த முடிவு சரயான ஒன்று, செயலாளர் நாயகத் துக்கு தான் அளித்த தனது சொந்த உறுதிமொழியில் அரசு நன்றாகச் செயற்பட்டிருக்குமானால் நாட்டின் ஆளுகை குறிப்பிடத்தக்க வகையில் இலகு வானதாக இருந்திருக்கும்.



எல்.எல்.ஆர்.சி தனது இறுதி அறிக்கையை 2011 டிசெம்பர் 16 ஆம் திகதி வெளியிட்டது. இடப்பெயர்வு, நிலப் பிணக்கிற்கான தீர்வு, தடுப்புக் காவல், ஊடக சுதந்திரம், நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் வலிந்து காணாமற் போகச் செய்தல் பற்றிய விசாரணைகள் உட்பட மனிதவுரிமைகள் விடயங்கள் தொடர்பான எல்.எல்.ஆர்.சியின் பல பரிந்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றது.

இன்று வரையில் ஆக்கபூர்வமான இந்தப் பரிந்துரைகளில் கையளவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.நம்பகமான உள்நாட்டு விசாரணையை நடத்துவதற்கு அரசு தவறியமையினாலேயேதான ஜனாதிபதியுடன் செய்துகொண்ட உடன்பாட்டைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தம் பாட்டிலேயே மேற்கொள்வதற்கு செயலாளர் நாயகம் தள்ளப்பட்டார் என்பது துல்லியமான காரணமாகும்.

இலங்கையில் பொறுப்புக் கூறல் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகள் ஜனாதிபதியினதும், செயலாளர் நாயகத்தினதும் கூட்டறிக்கையைப் பூர்வாங்க அடிப்படையாகக் கொண்டவை.

அறிக்கையில் விபரமாகக் குறிப்பட்டப்பட்ட குற்றச்சாட்டுகள், யுத்தத்தின் இறுதிப் பகுதியில் இரு தரப்புகளும் அதனை முன்னெடுத்த முறைமையின் காட்டுமிராண்டித்தனமான, சட்டவிரோதமான பண்பியல்புகள் குறித்து அதிர்ச்சி தரும் அம்சங்களை வெளிப்படுத்துவனவாக இருந்தன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை பல எண்ணிக்கையில் கொலை, அழிப்பு, சிறை, அடக்குமுறை, காணாமற் செய்தல் போன்ற யுத்தக் குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நம்பகரமான குற்றச்சாட்டுகளை அறிக்கை கொண்டிருந்தது.

விமர்சன ரீதியில், யுத்தத்தின் இறுதியில் பெரும்பாலான பொது மகள் இழப்புகள் அரசுப் படை களின் கண்மூடித்தனமான ஷெல் வச்சுக்களினால் ஏற்பட்டவை எனறு குழு அவதானித்து வெளிப்படுத்தியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ பொறுத்தவரையில், யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நம்பகரமான குற்றச் சாட்டுக்களை குழு கண்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்வதானால் முன்னர் செயலாளர் நாயகம் என்ன செய்தாரோ அதனையே மனித வுரிமைகள் கவுன்ஸிலும் துல்லியமாக மீண்டும் செய்தது. இலங்கை அரசு தான் வழங்கிய உறுதிமொழிகளை முன்னெடுப்பதற்கு ஊக்கப்படுத்திக் கொண்டு அதற்கான நேரத்தையும் இடத்தையும் வழங்கியது.

இருந்தும், அந்தத் தீர்மானத்தை இணைந்து முன்மொழிந்தவர்களுக்கு எதிராக சரியாக ஆராயாமல் அரசு தரப்பிடமிருந்து ஆவேசமாக வெளிப்பட்ட கருத்துகள், அரசுக்கு வழங்கப்பட்ட மரியாதைக்குத் தலைகீழானவையாகவே இருந்தன.

இந்தத் தீர்மானம் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டது என்பதை தாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். யுத்தத்துக்கு முழு ஆதரவு வழங்கிய அதே நாடுகளின் இத்தகைய நட்புறவான புத்திமதியை அரசு ஏன் இத்தனை தூரம் விரோதமாகப் பார்க்கின்றது என நான் கேட்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## நாட்டில் மத நல்லிணக்கம் இல்லை; நவியின் நிலைப்பாடு சரியானதே!

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

மதக் கடும்போக்குவாதம் குறித்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நிலைப்பாடு சரியான்தே என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடும் தரப்பினருக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பௌத்த கடும் போக்கு அமைப்புக்களினால் நாட்டுக்கே பாதகமான விளைவுகள் ஏற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு வழங்கப்படும் என முஸ்லிம் சமூகத்திற்கு அரசாங்கம் திடமான உறுதிமொழிகளை வழங்க வேண்டியது அவசியமானது. அண்மைய மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய தரப்பினரை கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதா என்பது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் தீர்மானிக்கவில்லை. எனினும், நாட்டில் மத நல்லிணக்கம் கிடையாது என்ற நவநீதம்பிள்ளையின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன். என்றார். (அ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சபாரத்தினம் சரஸ்வதி

தெல்லிப்பழை எழுவாவுடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/வீமன்காமம் ம.வி) கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

### கந்தையா தியாகரத்தினம்



உடுவில் உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகரத்தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### சிவசுப்பிரமணியம் சிவமகேசன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவமகேசன் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு St.John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Rd,Toronto,ON M4L 1S7, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி மாணிக்கவாசகர் ராஜலட்சுமி



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் ராஜலட்சுமி கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு The Co-Operative Funeralcaremore info, 91 London Road,Morden Surrey SM4 5HP, UKஎன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### சிற்றம்பலம் சின்னத்தம்பி

கரணவாய் கிழக்கு,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரம்பைகுறிச்சி கிழக்கு, வரணியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சின்னத்தம்பி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கரம்பைக்குறிச்சி கிழக்கு,வரணியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

839

## வெண்டைக்காய் வைத்தியம்



...அவருடன் பேசி விட்டு அப்பாவிடம் திரும்பி அப்பா கார்ல ஃபேன் பெல்ட் அறுந்து போச்சாம்.

அதை மாத்திட்டு வர்றதுக்குப் போய் இருக்காராம் என்றாள்.

காரை எடுத்து வரும் போதே இதை எல்லாம் செக் பண்ணிக் கொண்டாரனும்.

என்னா டிரைவர் இவரு?

காரு இப்போ நடுவுல வந்து கழுத்தறுக்குது என்று முணு முணுத்தார் அப்பா.

அவர்கள் சாப்பிட்டு முடித்தபோது டிரைவர் வந்து சேர்ந்தார்.

என்னப்பா கார் ரெடி ஆயிடிச்சா? என்றார் அப்பா.

ஆயிடிச்சு சார்.

இங்கே யாரும் சரியான மெக்கானிக் கிடைக்கலை.

வேறு ஒருத்தர் அவருக்குத் தெரிஞ்ச வரைக்கும் சரிபண்ணிக் கொடுத்தாரு என்றார் டிரைவர்.

மேலும் சில இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

லேசாக மழைத்தூறல் விழ ஆரம்பித்தது. எல்லோரும் ஓடிவந்து காருக்குள் உட்கார்ந்து கொள்ள, டிரைவர் வண்டியை எடுத்தார்.

அவர்கள் அடர்ந்த காட்டுப் பகுதியைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது.

இரண்டு புறங்களிலும் ராட்சத மரங்கள், அடர்த்தியான புதர்கள், ஆள் நடமாட்டமே இல்லாத சாலை. மழை சற்று வலுத்த அந்த நேரத்தில் கார் மெதுவாக சாலையில் ஓடியது.

அடிக்கடி குலுங்கி சத்தம் எழுப்பியது. என்னப்பா? என்றாள் அம்மா.

தெரியலம்மா என்றார் டிரைவர்.

காரை விட்டு இறங்கிய டிரைவர் மழையில் நனைந்து கொண்டே சோதனை செய்த பிறகு ஃபேன் பெல்ட் திரும்பவும் கட் ஆயிடிச்சு என்றார்.

மாத்தியாச்சுனு சொன்னியே என்றார் அப்பா எரிச்சலோடு. கார் மெக்கானிக் யாரும் கிடைக்கலே. அதனால் சைக்கிள் ரிப்பேர் செய்றவருக்கிட்டதான் சொன்னேன். அவரு மாத்தினதா சொன்னாரு என்று இழுத்தார் டிரைவர். என்னப்பா இது.... பொறுப்பு இல்லாம இருக்கே. சைக்கிள் ரிப்பேர் செய்யறவர்கிட்ட காரை ரிப்பேர் செய்யக்கொடுக்கலாமா?

காரும் கெட்டுப் போயிடுமே.இப்படி குழந்தைகளை வைச்சுக்கிட்டு ராத்திரியிலே, கொட்டற மழையில, காட்டுல நிக்கற மாதிரி ஆயிருச்சே?என்று சீறினார் அப்பா.

எல்லோரும் காருக்குள்ளேயே உட்கார்ந்து இருந்தனர்.

இருட்ட ஆரம்பித்தது. ஏதாவது கார் வருகிறதா?என்று டென்ஷனோடு பார்த்துக்கொண்டு இருந்தனர்.

யாராவது வந்து அடித்துப்போட்டால் கூடக் கேட்பதற்கு ஆள் இல்லாத காட்டுப் பிரதேசம் அது. அம்மாவுக்குப் பயமாக இருந்தது.

அப்பா பரபரப்போடு காணப்பட்டார். சிங்கமோ, புலியோ அங்கே இல்லை. ஆனாலும்,அந்தச் சூழல் எல்லோருக்கும் சற்று அச்சத்தைத் தந்தது. அரை மணி நேரத்துக்குப் பிறகு மழை விட்டது.

காருக்குள்ளே இருந்து வெளியே வந்தாள் தேனுகா.

மரங்களின் மேலே பசுமையும் மஞ்சளும் கலந்த வெளிச்ச புள்ளிகள் ஏராளமாகப் பறந்தன.

சுரேந்தர் அங்கே பார் மின்மினிப் பூச்சிகள் என்று அவனுக்குக் காட்டினாள்.

அவன் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அப்போது எதிரே காரின் ஹெட் லைட் வெளிச்சம் தெரிந்தது.

கையை அசைத்து அந்தக் காரை நிறுத்தினாள் தேனுகா.

உள்ளே இருந்தவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு உதவினர்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு காரிலிருந்து இறங்கி வீடு வந்து சேர்ந்தனர்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அம்மாசமையல்அறையில்வேலையாக இருந்தாள்.

தேனுகா அங்கே சென்றாள்.

அம்மா மிக்ஸியை ரிப்பேர் பண்ண மெக்கானிக் வேணும்.

அப்பதான் ஷாக் அடிக்காது.

காரை சரியா ரிப்பேர் செய்ய கார் மெக்கானிக் வேணும்.

அதைப்போல உன்னோட உடம்புக்கு வைத்தியம் பார்க்க ஒரு தரமான மருத்துவர் வேணும். இல்லேன்ன பிரச்சினை தீராது.

புரிஞ்சிக்கிட்டியா? மத்தவங்க சொல்ற வைத்தியத்தை எல்லாம் கேட்கக் கூடாது.

பணம் முக்கியம் இல்லே...

உன்னோட ஆரோக்கியம் தான் முக்கியம் என்றாள்.

மெக்கானிக் செஞ்ச தப்பால நாம காட்டுக்குள்ளே மாட்டிக்கிட்டு அவஸ்தைப்பட்டோம்.

அதே தப்பை என் உடம்புக்கு இனிமே செய்ய மாட்டேன்.

கொட்டற மழையில் நடுக்காட்டுல இருந்த போதே என்னோட தப்பைப் புரிஞ்சுக்கிட்டேன்.

இனிமே வெண்டைக்காய் வைத்தியம் தேவை இல்லை, நாளைக்கே டயாபடிஸ் சென்டருக்குப் போறேன் என்றார் அம்மா.

முற்றும்...........

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2014
19

- 1269 - பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் தண்டம்செலுத்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னன் கட்டளையிட்டான்.
- 1867 - மெக்சிகோவின் மன்னன் முதலாம் மாக்சிமிலியன் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டான்.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அனைத்து தெற்கு மாநிலங்களும் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பின்னர், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1910-அமெரிக்காவில் வோஷிங்டனில் முதல் தடவையாக தந்தையர் நாள் கொண்டாடப்பட்டது.
- 1912 - ஐக்கிய அமெரிக்காவில் 8-மணி நேர வேலைத்திட்டம் அமுலாகியது.
- 1943 - டெக்சாசில் இனமோதல் இடம்பெற்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையில் பிலிப்பைன்ஸ் கடல் சமர் இடம்பெற்றது.
- 1953 - அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜூலியஸ் மற்றும் எத்தல் ரோசன்பேர்க் என்ற யூதத் தம்பதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1961 - குவைத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

### பிறப்புகள்

- 1623 - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (இ. 1662)
- 1903 - வால்ரர் ஹமொண்ட், இங்கிலாந்துத் துடுப்பாட்டக்காரர் (இ. 1965)
- 1947 - சல்மான் ருஷ்டி, இந்திய எழுத்தாளர்
- 1970 - ராகுல் காந்தி, இந்திய அரசியல்வாதி
- 1978 - டெர்க் நொவிட்ச்கி, ஜேர்மன் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1867 - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோ மன்னன் (பி. 1832)
- 1993 - வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



74

...இருவரும் சொட்டாங்கல் விளையாடுவோம். ஒரு கல்லை மேலே தூக்கிப் போட்டு அது கீழே வருவதற்குள் தரையில் பரவிய கற்களைச் சேகரித்து, சேகரித்த கல்லும் சிதறாமல் மேலே போன கல்லையும் கீழே வருமுன் தவறவிடாமல் பிடிப்பது சொட்டாங்கல்.

அவள் தோற்றால், அவள் தலையில் நான் குட்டுவேன்.

நான் தோற்றால், என்னை அவள் தொடை கிள்ளுவாள்.

அவ்வப்போது கற்கள் தவறும்.

ஆனால் அவள் தவறவிடும் கல் மட்டும் அடிக்கடி அவள் மடியில் விழுந்து புதையும்.

ஒவ்வொரு முறையும் என்னையே எடுக்கச் சொல்வாள்.

நானும் எடுப்பேன்.

எனக்கு அவர்கள் வீட்டுப் புறத் தூய்மை பிடித்தது.

பூச்செடி பிடித்தது.

பாட்டுப் புத்தகங்கள் பிடித்தன.

ஒரே பாட்டுப் புத்தகத்தை இருவரும் வைத்துக்கொண்டு டூயட் பாடுவோம்.

பெண் குரலுக்கு அவள்.

ஆண் குரலுக்கு நான்.

ஆனால், பாட்டைக் கேட்டால் சுசீலாவும் ஜானகியும் பாடுவது மாதிரியே இருக்கும்.

சில நாட்களில் அந்த வீடு நிறம் மாறியது.

முகம் காட்டாத குழப்பங்கள் அங்கே முகாமிட்டன.

எனக்குத் தெரிந்த ஒரு பெட்டிக் கடைக்காரர், ஒரு பூண்டு வியாபாரி, பருத்திக் கமிஷன் கடைக்காரர் போன்றவர்களெல்லாம் அங்கே நடமாட ஆரம்பித்தார்கள்.

என்னை அவர்கள் கண்டுகொள்ள வில்லை.

ஆனால், என்னால் அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் என் அந்தரங்கத்தில் தலையிடுவதாகவே எனக்குப்பட்டது.




என் வீட்டில் அப்படி ஆணையிடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

"அந்த" வீட்டுக்கு நான் போகக் கூடாது என்று என்னைத் தடுத்தார்கள்.

"ஏன்" என்று கேட்டேன்.

"நீ சின்னப் பையன்; சொன்னால் கேள்" என்று வாக்கியம் எழுதாமலேயே முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

அவர்கள் அப்போது சொன்னதை நான் மறுக்கவில்லை; ஆனால், கேட்கவுமில்லை.

எனக்கென்னவோ அவளும் அந்த வீடும் கொடுத்த சுதந்திரம் எனக்கு அந்த ஊரில் வேறெங்கும் கிட்டவில்லை என்றே தோன்றியது.

நான் சனி, ஞாயிறுகளை நேசிக்க ஆரம்பித்தது அப்படி ஒரு தடை வந்த பிறகுதான்.

விடுமுறை நாட்களில் அவள் வீட்டுப் பூச்செடிகளுக்கருகில் அமர்ந்து படிப்பேன்.

அவள் பக்கத்தில் இருந்தால் படிப்பு நன்றாக ஏறுவதாகவே எனக்குப்பட்டது.

சில நாட்களில் என் தூரத்து உறவினர்களின் சில முகங்கள் அங்கே உலவ ஆரம்பித்தன.

அதன்பிறகு கண்டிப்பாய் அங்கே கால் வைக்கக் கூடாது என்று நான் அடிக்கப்பட்டதாய் ஞாபகம்.

என் வயதில் எனக்கு அப்போது நண்பர்களே இல்லை.

என் கலாரசனையோடு ஒத்துப் போகிறவர்கள் யாரென்று என்னால் அப்போது கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்த வயதில் என் கண்ணீரையும், தனிமையையும் தவிர, எனக்குத் துணைக்கு வரத் தோழமையில்லை.

நான் வளர வளர எங்கள் வீடு வறுமை வாய்ப்பட்டது.

என் கனவுகள் வானத்திலும், என் கால்கள் சகதியிலுமாய் ஒரு முரண்பட்ட வாழ்க்கையில் முடமானேன்.

என் தந்தை வயலை விற்றார்; நான் வருந்தவில்லை.

நகைகளை விற்றார்; எனக்கு அது துயரமில்லை.

வீட்டை விற்றார்; நான் இடியவில்லை.

ஆனால் வீட்டில் நான் அடிக்கடி பார்த்து ஆராதிக்கிற ஒரு பொருளை விற்றார்; அன்றுதான் நான் அடங்காமல் அழுதேன்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்

25



### தோற்றம்

ராகுவுடன் சுக்கிரன் இணைந்த ஆதிக்கப் பலன். உயரமாகவே இருப்பர். பார்க்க அழகாக மென்மை கலந்த தோற்றத்துடன் இருப்பர். சதைப் பிடிப்புடன் இருப்பர். மார்பு, இடுப்பு, வயிறு எல்லாம் சதைப்பிடிப்பு கொஞ்சம் அதிகமாயிருக்கும். சிவப்பாக இருப்பர். முடி அடர்ந்து சிறிது செம்பட்டை நிறமாக இருக்கும். மார்பில் முடி இராது. முகம் கோண வடிவில் பரந்த குண்டு முகமாக இருக்கும். பற்கள் நன்கு அமைந்திருக்கும். நெற்றி பெரிதாக இருக்கும். புருவம் நன்றாக நீண்டு அமைந்திருக்கும். மூக்கு முனை மென்மையாக சிறிதாக இருக்கும். சீக்கிரம் வழுக்கை விழும். முடி, தோல் மென்மையாக இருக்கும். கண்கள், பார்வை கவருவதாகும். இலேசாக மாறுகண் அமைந்து இருக்கலாம். எவரையும் ஈர்க்கும் பளிச் சென்ற தோற்றம், உதடுகள் தடிமனாக இருக்கும். தாடை நுனி சதை திரண்டு இருக்கும்.

### குணம்

தைரியம் உள்ள மகிழ்ச்சியுடன் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பவர்கள். அசாத்திய மன உறுதி கொண்டவர். சளைக்காதவர்கள். போர் வீரர் போன்ற சுறுசுறுப்பானவர்கள். பேச்சு தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் பிறரை மகிழ்வுபடுத்துவதாகவும் அமைந்திருக்கும்.

நியாயத்துக்காக எவரையும் தட்டிக் கேட்கத் துணிந்தவர். மடை திறந்த வெள்ளம் போன்ற பேச்சு வரும். நகைச்சுவையாக, நயமாக அருமையான சொற்களுடன் பேச்சு தெளிவான உச்சரிப்புடன் உரத்த குரலில் அமையும். நன்கு நிறையப் படித்தவராக இருப்பர். சிறு வயதிலேயே கவிதை இயற்றுவார். சுக நாட்டம் உள்ள உல்லாசப் புருசர் இவர். இயற்கையோடு இயைந்து காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள நல்ல இடத்தில் வசிக்க விரும்புவார். அதிகாரத் தோரணையுடன் பேசி நடப்பார்.

உலகமே தம்முடையது என உரிமையுடன் எல்லோரிடமும் சரளமாகப் பேசிப் பழகுவர். ஒன்றில் நிலைத்த மனம் இருக்காது. இவரால் தொடங்கப்பட்ட வேலைகள் எத்தனையோ முடிவின்றி பாதியில் விடப்பட்டிருக்கும். காரணம் அலட்சியம், சிறுவனைப் போன்று இருத்தல். அதற்காகவோ அதனால் உண்டான இழப்பிற்காகவோ வருத்தமும் படமாட்டார். கண்டபடி வேண்டியவர், வேண்டாதவர் என்று பாராமல் எதிர்ப்பதால் தொல்லைகள் தொடரும். வேலைக்காரரிலிருந்து முதலாளிகள் வரை எவர் மீதும் கறாராக குற்றம் கண்டு திட்டுவதாலும் பேசுவதாலும் முகத்திற்கு நேரே நடவடிக்கையில் இறங்குவதாலும் இவர்களுக்குப் பகைவர் மிகுவர். தம்மால் இயன்ற சிரமங்களைத் தருவார். இதெல்லாம் இவர்களே இவர்களுக்கு இழுத்து விட்டுக்கொள்ளும் துயர்கள். அழகை விரும்பி ரசிக்கும் உள்ளம் வாய்ந்தவர். எந்த விலை கொடுத்தும் தம் மனம் கவர்ந்த பொருட்களை வாங்கி விடுவர். பட்டுத் துணி, புதுவகை அலங்கார ஆடை, உயர்ந்த வேட்டி முதலியவற்றை விரும்பி வாங்கி அணிவர். வீட்டை, படுக்கையை, புத்தகங்களை அழகான முறையில் வைத்துப் பாதுகாப்பார்.

வாசனைப் பொருள், அலங்காரப் பொருட்களை வண்ண வண்ண டிசைன்கள் உள்ளவற்றை விரும்புவர். சுவையாக விதவிதமாக உண்ண விழைவர். காணவும் நுகரவும் சுவைக்கவும் என ஐம்புலன் சுகங்களை மிக நயமாக உயர்ந்த வகையில் அனுபவிக்க விரும்புவர். தீய நண்பர், தீய பழக்கம், தீய செயல்களும் இடம்பெறும். இதனால் நோயும் செலவும் அடைவர். பிறர் பொறாமைப்படும்படி படாடோபமாக வாழ நினைப்பர். வறட்டுக் கௌரவத்தையும் பார்ப்பார். அழுக்கு, ஏழ்மை, முட்டாள்தனம், பிறரை துன்புறுத்துவதைச் சகித்துக்கொள்ள மாட்டார். பிறர் பார்க்க வேண்டியவர் மெச்ச ஆடம்பரமாக வசதிகளுடன் வாழ விரும்புவர். நினைத்தது நடக்க, விரும்பியது கிடைக்க பலனைப் பலமாக வேண்டியே பகவானையும் தொழுது வேண்டுவார். தெய்வ வணக்கத்திலும் படாடோபம் செய்வர். கச்சேரி, கேளிக்கைகளுடன் விழா எடுப்பர். பூவும் பந்தலும் சாப்பாடும் அமர்க்களப்படும். தம்மை அண்டியவரை சுகமாக வாழச் செய்வர். பழிவாங்கும் உணர்வு, ஆத்திரம் பயங்கரமாக வரும். பிடிக்காதவரை தண்டிக்க நினைப்பர். இழித்து உரைப்பார். பயங்கரமாக சண்டை பிடிப்பர். இரக்க மனமும் தம்மை பணிந்தோருக்கு எல்லாம் செய்தலும் இவரிடம் உண்டு. வசதிகளோடு பெரு வாழ்வு கிட்டும். பிறக்கும் போது எப்படி இருந்தாலும் போகப்போக நல்ல நிலைமை மாறி அமையும். பெண்கள் ஆதரவு இருக்கும். பகையும் உண்டு. சாதனைகளைப் புரிபவர் இவ்வெண்ணில் உளர். பேச்சைத் தீயவற்றுக்குப் பயன்படுத்தி சாமானிய சுக வாழ்வு வாழ்வோரும் இருக்கின்றனர். கற்பனை கனவு காண்பர்.

### குடும்பம்

முதலில் நோக்கமின்றி அலைந்தாலும் பிறகு மாறி மாறி ஒரு நல்ல தொழிலைப் பிடித்துக் கொள்வர். சிரமங்களில் எதிர் நீச்சல் இட்டு முன்னேறுவர். கவி மனம் கொண்டவர். ஆதலால் காதலில் ஈடுபடுவார். சகோதர, சகோதரிகளுடன் பிரியமும் கொண்டு சச்சரவுமிடுவார். மனைவி நன்கு அமைவாள். ராட்சத குணத்தோடு இவர்கள் நடப்பினும் நல்லவர்களாக அவள் குடும்பத்தைப் பார்ப்பாள். அநேகருக்கு மனைவியோ கணவனோ சரியாக அமைவதில்லை. மனைவியால் பிரயோசனம் இருப்பதில்லை. ஆனாலும் இவர்கள் மகிழ்வுடன் இருப்பர். உலகவாழ்வு போதும் என இவர்களுக்குத் தோன்றாது. இவர்களின் ரசனையில் உயரம் அதிகம். இதனாலேயே இவர்களைத் திருப்தி செய்கிறவர்களோ பொருள் எதுவுமோ இவ்வுலகில் இல்லை.

வீடு, ஆடை அழகாக தூய்மையாக இருக்க விரும்புவர். உணவு சுவையாக புதுமையாகக் கேட்பர். நல்ல மனமும் அறிவும் அழகும் கொண்ட மிக உயர்ந்த பெண்ணை விரும்புவர். எப்படிக் கிடைப்பார்? ஆனால், நல்லவரானால் இரக்கம் அதிகம் கொண்டு உலகத்தின் துன்பங்களையெல்லாம் போக்கத் துடிப்பர்.

### தொழில்

நல்ல நிர்வாகிகளான இவர்கள் அரசியலில் இருந்தால் பெரும் பதவியடைவர். அதிகம் சிரமப்படாத நகை, பட்டு, ஜவுளி வியாபாரம் செய்வார். கவிஞராக விளங்குவர். பாடகராகலாம். இசையமைப்பார். ஆடம்பர அழகு, வாசனைப் பொருள் தயாரிப்பார். அல்லது விற்பார். இது தொடர்பான அலுவலகம், கடைகளில் பணி புரிவார். ஹோட்டல் நடத்துவார். சமையல் ஒப்பந்தம் எடுத்து பணம் சம்பாதிப்பர்.

அச்சு, நூலகம், பத்திரிகை, மீடியாக்களில் வேலை புரிவர். கலைத் துறையில் ஏதாவது செய்வர். தையற்காரராக இருப்பர். வெள்ளி, இரும்பு சம்பந்த வேலை தொழில்களில் இருப்பர். மதுபானக் கடை நடத்துவர். வீடியோக் கடை நடத்துவர்.

### நோய்

வெப்பம் தாங்க மாட்டார். கட்டிகள் இதயப் பாதிப்பு, தலைவலி, நரம்புப் பலவீனம், சிறு நீரகப் பாதை நோய், தொண்டையில் அறுவை வரலாம். சர்க்கரை, உப்பு இரத்தத்தில் மிகும் கோளாறு உண்டாகும்.

-கணித்தவர்-ஸ்வாமி- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்தது கடற்படை

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை, நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் மீண்டும் விரட்டி அடித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து வைத்துள்ள படகுகளை விடுவிப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த ஜூன் 9 ஆம் திகதி முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, வேலை நிறுத்த போராட்டத்தை கைவிட்டனர்.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை காலையில் 705 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

தனுஷ்கோடி கடல் பகுதியில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் 10க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளைச் சுற்றிவளைத்து விரட்டி அடித்துள்ளனர்.

மேலும், மீனவர்கள் மீன்பிடிக்க விரித்திருந்த வலைகளையும் அறுத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து, மீனவர்கள் தங்கள் படகுகளைத் திருப்பிக் கொண்டு இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை கடற்படையினரிடம் இருந்து தமிழக மீனவர்களை காப்பாற்ற இந்திய மத்திய அரசாங்கம் வலுவான வெளிநாட்டு கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனர் பண்ருட்டி வேல்முருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தின் நூற்றுக்கணக்கான மீனவர்களை கொலை செய்தமைக்காக இலங்கை கடற்படையினருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தண்டனையாளிகள் மூவரையும் சிறையில் சென்று சந்தித்த பின்னர் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா சிறையில் உள்ள முருகன், அறிவு, பேரறிவாளன் ஆகியோர் விடுதலைப் பெறுவதற்கான வழிகளை மேற்கொள்வார் என்றும் தாம் உறுதியாக நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதி செய்க

## சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

மதங்களால் சிறுபான்மையினராக வாழும் மக்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

அண்மையில் அளுத்கம மற்றும் பேருவளை பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் போது குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டனர்.

பொதுபலசேனாவின் பேரணி ஒன்றை அடுத்தே இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தநிலையில் இது அண்மைக்காலப் பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற பாரிய இனக்குரோத நடவடிக்கையாகும் என்று மன்னிப்புசபை கூறியுள்ளது.

எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்றும் சபை கேட்டுள்ளது.

பொலிஸார் ஊரடங்கு சட்டத்தை அமுல்செய்திருந்த வேளையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வனமுறைகள் இடம் பெற்றுள்ளமையை சபை சுட்டிக்காட்டியுள் ளது.

சமூக தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தபோதும் பொதுபலசேனாவின் பேரணியை நடத்த அனுமதித்தமையானது அதிகாரிகளின் தவறு என்றும் சர்வதேச மன்னிப்புசபை குற்றம் சுமத்தியுள்ளது. (அ)

# வேடிக்கை பார்க்கும் செயலை அரசாங்கம் செய்து வருகின்றது

## ரணில் விக்ரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பல நபர்களுக்கு சட்டத்தை கையில் எடுக்க இடமளித்துவிட்டு வேடிக்கை பார்க்கும் அணுகுமுறையை கையாண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலங்களை நடத்தும் போதும், ஆர்ப்பாட்டங்களை செய்யும் போதும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக கூறி நீதிமன்றத்தின் தடையுத்தரவை பெற்று அவற்றை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால்அளுத்கம சம்பவங்கள் மண்டும்ஏற்படாதவகையில்நடவடிககைகளை எடுப்பதற்கு பதிலாக சம்பவங்கள் ஏற்படும் படியான தூண்டுதலை ஏற்படுத்தும் புறச் சூழலை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

இதன் பிரதிபலனாக இனவாதம் தூண்டப்பட்டு, பாரியளவில் சொத்து சேதங்களும் உயிர் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை எதிர்பார்க்கின்றோம்.

சம்பவம் ஏற்பட்டு அது பரவி செல்ல இடமளித்து எந்த காரணத்திற்காக அரசாங்கம் வேடிக்கை பார்த்தது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இந்த சம்பவத்திற்கு பொறுப்பான தலைவர்கள், நபர்கள் யார், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மத்திய கிழக்கில் சிங்களவர்கள் தொழில் வாய்ப்பை இழக்க நேரிடும்

## வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

சிங்கள பௌத்தர்களுக்கு மத்திய கிழக்கில் உள்ள முஸ்லிம் நாடுகளில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுவது இல்லாமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்காது போனால் இலங்கை பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கும் எனவும் அவர் எதிர்வுகூறியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுத்த போது இலங்கைக்கு ஆதரவு வழங்கிய பல முஸ்லிம் நாடுகள், இலங்கையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் இலங்கை அரசாங்கத்திடம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே மத்திய கிழக்கு மற்றும் ஏனைய பிராந்தியங்களில் உள்ள முஸ்லிம் நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளமை குறித்து நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# சிங்களவர்களின் இதயங்களிலிருந்தே தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும்

## பிரபா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டங்களை இறக்குமதி செய்ய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் விசாரணை நடத்தப்பட உள்ள நிலையில் பேருவளை போன்ற சம்பவங்கள் இடம் பெறுவது நாட்டுக்கு நல்லதல்ல.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்.

பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியில் தீர்வு காணப்படாவிட்டால் தமிழ் மக்கள் பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

சிங்கள மக்களின் இதயங்களிலிருந்தே தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்பட முடியும்.

வெளிநாடுகளிலிருந்து பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்களை இறக்குமதிசெய்ய முடியாது என்றார். (அ)



திருமதி.சுபாஷினி பிரணவன் எழுதிய குமுறல் கவிதை நூல் வெளியீட்டு விழா நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது ஓய்வு பெற்ற வட மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா முதல் பிரதியை திருமதி யாழினி ராஜ்குமாருக்கு வழங்கி வைப்பதையும் அருகில் நூலாசிரியர் திருமதி.சுபாஷினி பிரணவன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இலங்கையின் சமாதானத்துக்காக பாடுபட்டவர்கள் முஸ்லிம்கள்

## இஸ்லாமிய ஒத்துழைப்பு சம்மேளனம்

இலங்கையில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று இஸ்லாமிய ஒத்துழைப்பு சம்மேளனத்தின் செயலாளர் இயட் அமீன் மதானி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இதில் இறப்புக்களும் காயங்களும் ஏற்பட்டுள்ளன.

சொத்துக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே குறித்த வன்முறைகளை முடிவுக்கு கொணடு வரவேண்டும்.

இலங்கையின் சமாதானத்துக்காக முஸ்லிம்கள் பாடுபட்டு வந்துள்ளனர்.

இந்தநிலையில் வன்முறைகளை மேலும் பரவாமல் தடுக்க வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு என்று அவர் கேட்டுள்ளார். (அ)

# நாட்டை பாதுகாக்க ஐ.தே.க. அர்ப்பணிப்புடன் செயற்படும்

## சஜித் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றி தொடர்பில் உரிமை கோரி மார்தட்டிக் கொள்ளும் அரசாங்கம் நாட்டில் இடம்பெற்று வரும் இன,மத வன்முறைகளுக்கான பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் தவறான வெளிவிவகாரக் கொள்கைகளின் காரணமாகவே உலக நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை நாட்டின் இறைமையை பாதிக்கும் என ஆளும் கட்சியினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பிலான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

படைவீரர்கள் உயிர்த்தியாகத்துடன் ஈட்டிக் கொடுத்த தூய சுதந்திரத்தை அரசாங்கத்தின் வெளியுறக் கொள்கைகள் இல்லாமல் செய்து வருகிறது.

அரசாங்கத்திடம் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் தாய் நாட்டை நேசிக்கும் கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

21.06.2014 - 07.01.2016





அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

**ஆறாமிடத்தில் ராகு பலம்! அஷ்டலட்சுமி யோகம் வரும்!**

**சுறுசுறுப்பில் சூப்பர் ஸ்டாராக விளங்கும் மேட இராசி நேயர்களே!**

## மேடம்



நவக்கிரகங்களில் மிகுந்த பலம் பெற்ற கிரகமாகவும், தைரியகாரகன் என்றும் வர்ணிக்கப்படும் செவ்வாய்தான் உங்கள் ராசிநாதனாக விளங்குகிறார். எனவே, எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு இயற்கையாகவே இருக்கும். சந்தர்ப்பங்களுக்காக ஒரு 'சில சமயங்களில் நீங்கள் காத்திருந்தாலும் கூட சமயம் வரும்பொழுது எதிரிகளைப் பந்தாடி வெற்றி காண்பீர்கள்.

எதிலும் அவசரத்தை கையாளுபவர்களாகவும், உணர்ச்சி வசப்படுபவர்களாக வும் இருப்பதால் நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். பரபரப்பைக் குறைத்துக் கொண்டு பக்க பலமாக இருப்பவர்களையும் அரவணைத்துக் கொண்டால் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிக்க இயலும்.

உழைப்பதற்கு அஞ்சாத உள்ளம்கொண்ட உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படியான மாற்றத்தைக் கொடுக்கும் என்பதைப் பார்ப்போம்.

### ஆறாமிடத்து ராகுவால் அஷ்டலட்சுமி யோகம்!

இதுவரை துலாம் ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் உங்கள் ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 21.06.2014 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்கள். 6ஆம் இடமான கன்னியில் ராகுவும், 12 ஆம் இடமான மீனத்தில் கேதுவும் சுமார் ஒன்றரை ஆண்டுகள் தங்கி இருந்து உங்கள் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றப் போகிறார்கள்.

6இல் ராகுவும், குரு கேந்திரத்திலும் சஞ்சரிக்கும் பொழுது அஷ்டலட்சுமி யோகம் செயற்படும் என்பார்கள். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த பலன்கள் வந்து சேரும். தொழிலில் முதலிடம் பிடித்து எதிரிகளை ஆச்சரியப்பட வைக்கப் போகிறீர்கள்.

பொதுவாக 'உங்களுக்கென்று ஒரு சுய ஜாதகம் இருக்கிறது. உங்கள் மனைவி, மக்களுக்கு; குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கு என்றும் சுயஜாதகம் இருக்கிறது. அந்த அடிப்படையில் ராகு உங்களுக்கு பலன்களைக் கொடுப்பார். அந்த ராகு எந்த சாரத்தில் இருக்கிறார்? அவரை எந்தெந்த கிரகங்கள் பார்க்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொண்டு அதற்குரிய ஸ்தலங்களுக்கு சென்று சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்தால் உடனடி பலன் கிடைக்கும்.

கோச்சார ரீதியாக ராகு எந்தெந்த சாரத்தில சஞ்சரிக்கிறதோ அந்தந்த சார பலத்தின் அடிப்படையில்தான் பலன் கொடுக்கும். காரணம் ராகு- கேதுக்களுக்கு சொந்த வீடு இல்லை. அவை நிழல் கிரகங்கள் என்று வர்ணிக்கப்படுபவை. எனவே இந்த ராகு-கேது பெயர்ச்சியின் போது மூன்று நட்சத்திரங்களில் ராகுவும், மூன்று நட்சத்திரங்களில் கேதுவும் உலா வர இருப்பதால் இருக்குமிடத்திற்குரிய பலனோடு, சார பலமும் இணைத்துப் பார்த்து செயற்படுவதே நல்லது.

6இல் சஞ்சரிக்கும் ராகு அற்புதமான பலன்களை உங்களுக்கு அள்ளி வழங்கப் போகிறது. சேமிப்பு உயரும். செய்தொழிலில் எதிர்பார்த்ததை விட இரண்டு மடங்கு இலாபம் கிடைக்கும். பழைய தொழில்களை நடத்த இயலவில்லையே, மூலதனமாக போதுமான பொருளாதாரம் இல்லையே என்று நினைத்தவர்களுக்கு எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைத்து மகிழ்வளிக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலைபளு குறைந்து, எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். உடன் பணிபுரிபவருடன் ஏற்பட்ட பிணக்குகள் மாறும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகளில் இதுவரை இருந்த தடை அகலும்.

எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடத்தில் பாம்பு கிரகங்கள் சஞ்சரிக்கும்போது எதிர்ப்புகள் அகலவும், வியாதிகளிலிருந்து விடுபடவும், கடன் சுமை குறையவும் யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் சர்ப்ப ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது.

### பனிரெண்டாமிடத்து கேது பயணத்தை உருவாக்குமா?

ஆறாமிடத்தில் ராகு சஞ்சரிக்கும் அதே நேரத்தில் பனிரெண்டாமிடத்தில் கேது சஞ்சரிக்கப் போகிறார் அல்லவா? அதனால் பயணங்கள் அதிகரிக்கும், விரயங்கள் அதிகரிக்கும் என்றெல்லாம் நீங்கள் நினைக்க வேண்டாம். சுய பலம் பெற்ற கிரகமாக இருந்தால்தான் நீங்கள் அதைப்பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும். ராகு- கேதுக்களோ நிழல் கிரகங்கள்தான். எனவே, அவற்றை பற்றியும் அதனால் விளையும் பயனைப் பற்றியும் உடனடியாக முடிவெடுக்க முடியாது. அவை இருக்குமிடம், பாத சாரம் அதைப் பார்க்கும் கிரகம் ஆகியவற்றை எல்லாம் வைத்துத்தான் முடிவெடுக்க இயலும். இருப்பினும் பொதுவாக பனிரெண்டாமிடம் விரய ஸ்தானம் என்பதால், அவற்றை சுப விரயமாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்தி சாலித்தனமாகும். குடும்ப உறுப்பினர்களுக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கலாம். பிள்ளைகளின் கல்யாண முயற்சிக்கு கனிவோடு செலவு செய்யலாம். கட்டிய வீட்டைப் புதுப்பிக்கலாம்.

ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் இந்த நேரத்தில், கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அடி மனதில் இருந்த பயம் அகலும். அன்னிய தேச தொடர்பால் அனுகூலம் ஏற்படும்.

### வாழ்க்கை வளமாக வழிபாடு!

ஆறாமிடத்து ராகு அதிர்ஷ்டத்தை அள்ளி வழங்கவும், 12ஆம் இடத்து கேது பயணத்தால் நற்பலன்களை கொடுக்கவும், செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கைக்கு பூமாலையும், பாமாலையும் சூட்டி மகிழுங்கள். சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் சார பலம் அறிந்து பரிகாரங்களைச் செய்வதோடு அருகிலுள்ள கற்பக விநாயகரையும், அங்கு அமர்ந்திருந்து ஆசி வழங்கும் நவக்கிரகங்களையும் வழிபட்டு வாருங்கள்.

### சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்

16.12.2014 இல் விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். உங்களுக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்க காலம். இக்காலத்தில் குடும்பப் பொறுப்புகள் கூடும். பண நெருக்கடிகள் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. தூர தேசத்தில் இருந்து அழைப்புகள் வந்து சேரும். இலாபம் வந்த மறு நிமிடமே செலவாகலாம். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் தன்னிச்சையாக செயற்படாமல் தக்க விதத்தில் குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடந்தால் மன அமைதியும் கிடைக்கும். மகிழ்ச்சியும் இல்லத்தில் குடிகொள்ளும்.

### குருப் பெயர்ச்சி

ராகு-கேது பெயர்ச்சிக்கு ஒருவாரம் முன்னதாகவே குருப்பெயர்ச்சி வந்துவிட்டது. கடகத்தில் உச்சம் பெற்ற குரு மீனத்தில் சஞ்சரிக்கும் கேதுவைப் பார்க்கிறார். எனவே ஓராண்டு காலத்திற்கு கேதுவால் ஏற்படும் கெடு பலன்களிலிருந்து விடுபட்டு குரு பார்வையால் நற்பலன்களை நீங்கள் வரவழைத்துக் கொள்ள இயலும். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

05.07.2015இல் சிம்ம ராசியில் குரு சஞ்சரித்த பின்னால் உங்கள் ராசியையே குரு பார்க்கப் போகிறார். 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதால் பொருளாதாரநிலை உயரும். புகழ் கூடும். பெருமைக்குரிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். திருமணத் தடை அகலும். செல்வநிலை உயரும். தொழில் வளம் பெருக துணையிருப்போர் ஒத்துழைக்க வாழ்வில் வளம் சேரும். வசந்தம் உருவாகும்.

### பாதசாரப்படி ராகு-கேது தரும் பலன்கள்!

**ராகு செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

எண்ணிய காரியங்கள் எளிதில் முடியும். இல்லம் தேடி புதிய வாய்ப்புகள் வரும். குடும்பத்திலிருந்த குழப்பங்கள் அகலும். அத்தியாவசிய பொருட்களை அடுக்கடுக்காக வாங்கிச் சேர்ப்பீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

**ராகு, சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

இட மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் எதிர்பார்த்தபடி அமையும். வேலை கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். கல்வி சம்பந்தமான முயற்சிகளும் வெற்றி பெறும்.

**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். பாகப்பிரிவினைகள் முடிவடைவதில் இழுபறி நிலையே இருக்கும். பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். இக்காலத்தில் சர்ப்ப தெய்வ வழிபாடு பலன்தரும்.

**கேது, புதன் காலில் சஞ்சரிக்கும் பொழுது: (21.06.2014 முதல் 25.02.2015 வரை)**

சகோதர ஒற்றுமை பலப்படும். செய்தொழிலில் வருமானம் சீராக இருக்கும். தன்னம்பிக்கையோடு பணியாற்றி தக்க விதத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணி ஓய்வு பெற்று புதிய தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள்.

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

வியாபார விரோதங்கள் விலகும். தொழிலில் போட்ட முதலீடுகள் இலாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும். தேக நலன் சீராகி திருப்திப்படுத்தும். பகை நட்பாக மாறும். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். பெற்றோர்களின் உடல்நலன் கருதி செலவிட நேரிடும்.

**கேது, குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

வரவும், செலவும் சமமாகும். வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும. உயர் பதவிகள் தேடிவரலாம். அயல்நாடு செல்லலாமா? என்று ஒரு சிலர் யோசிப்பர். தெய்வ வழிபாடுகளை திசாபுத்திக்கேற்ப தேர்ந்தெடுத்து செய்தால் எதிலும் வெற்றி கிடைக்கும்.

## ஆறாமிடத்தில் ராகு பலம்! அஷ்டலட்சுமி யோகம் வரும்!

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

நாளை இடபம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரிசங்கு நிலையில் அரசு!

இந்த விசாரணைக் குழுவில் இடம் பெற்றுள்ள இரண்டு வெளியக நிபுணர்களும், 5 நாட்கள் இலங்கையில் பயணம் செய்து விசாரணைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்குமா என்ற சந்தேகம் உள்ளது. இந்த விசாரணைகள் 10 மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளதால், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படாது என்றே தெரிகிறது. இதனால் இறுதி அறிக்கை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடக்கவுள்ள கூட்டத் தொடரில் தான் பெரும்பாலும் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசாரணைக்குழு, இலங்கைக்குள் அனுமதிக்கப்படாவிட்டாலும், வெளியே இருந்து விசாரணைகளை நடத்தும் என்பதில் சந்தேகமில்லை. எனினும், இந்த ஆணைக்குழு வெளியே இருந்து எவ்வாறு இலங்கையில் உள்ள சாட்சிகளை அணுகப் போகிறது. சாட்சியங்களைப் பெறப்போகிறது என்பதெல்லாம், இலங்கை அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைகளில்தான் தங்கியுள்ளது.

ஐ.நா. குழுவின் முன்பாக சாட்சியமளிப்பதை, அரசாங்கம் சட்டவிரோதமானதாக அறிவிக்க முடியாது. எனினும், இலங்கையில் இருந்து எவரும் சாட்சியமளிப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுக்கலாம். இந்த விசாரணையில் சாட்சியமளிக்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் கூட, போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தாம் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளதாக- படையினருக்குத் தலைமை தாங்கியவர் என்ற வகையில் அவர்களைப் பாதுகாக்கத் தயாராக இருப்பதாக கூறியுள்ளார். எனினும், அரசதரப்பில் இருந்தோ, இராணுவத் தரப்பில் இருந்தோ எவரும் அதிகாரப்பூர்வ சாட்சியாளராக பங்கேற்கப் போவதில்லை என்று தெரிகிறது. இன்னொரு பக்கத்தில், சர்வதேச விசாரணைகளில் இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து தாம் சாட்சியமளிக்கத் தயார் என்று நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் கூறியுள்ளார். இவர்போல இந்த விவகாரங்களில் தொடர்புடைய பலரும் விசாரணையில் சாட்சியமளிக்க முன்வரலாம். ஆனால், இவர்களையெல்லாம் இலங்கை அரசாங்கம் ஏதோ பொய்ச்சாட்சி சொல்பவர்கள் போலத் தான் பார்க்கப் போகிறது. எவ்வாறாயினும், இம்மாத நடுப்பகுதியில் தொடங்கப் போகும் இந்த விசாரணை- அரசாங்கத்துக்குப் பெருந்தலைவலியாகவே அமையப்போகிறது.

இலங்கையில் போரின் இறுதி ஏழு ஆண்டுகளில் இடம்பெற்ற மனிதாபிமான, மற்றும் மனித உரிமைச் சட்டமீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் குழு இம்மாத நடுப்பகுதியிலிருந்து செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நிலைகளிலான இந்தக் குழு பற்றிய முழுமையான விபரம் இன்னமும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் வெளியிடப்படவில்லை. பிரதானமாக, ஏழு ஆண்டுகளிலும் இடம் பெற்ற மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்போவது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அதிகாரிகள் குழுதான். அதற்கு ஆலோசனைகளை வழங்கி- வழிநடத்தி- அறிக்கை தயாரிப்பை மேற்பார்வையிடும் பொறுப்பு இரண்டு வெளியக நிபுணர்களைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அதாவது இரண்டு கட்ட விசாரணை அமைப்பு முறையாக இதனைக் கருதலாம்.

இந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் 13 அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவுக்கு, சான்ட்ரா பெய்டாஸ் என்ற மூத்த ஐ.நா. அதிகாரி தலைமை தாங்கவுள்ளார் என்பதை, ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர், ரூபேட் கொல்வில் கடந்த வியாழக்கிழமை உறுதிப்படுத்தியிருந்தார். எனினும், ஏனைய வெளியக நிபுணர்கள் குறித்த விபரங்களையோ- விசாரணைக்குழுவில் இடம் பெறும், ஏனைய ஐ.நா. அதிகாரிகள் குறித்த விபரங்களோ அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை.

வெளியக நிபுணர்களாகப் பங்கேற்பவர்கள், தொண்டு அடிப்படையில் சேவையாற்றுபவர்களாகவே இருப்பர் என்று தகவல்கள் கூறுகின்றன. முன்னதாக, முழு விசாரணைக்கும் தலைமை தாங்கும், வெளியக நிபுணராக ஐ.நாவின் முன்னாள் பொதுச் செயலர் கொபி அனான் நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகின. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே அவரை நியமிக்க விரும்பியதாக கூறப்பட்டது.

எனினும், அவருக்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்க மறுக்கலாம் என்று தகவல்கள் வெளியான நிலையில், அவர் அந்த வாய்ப்பை ஏற்கத் தயங்கியதாக தகவல்கள் கூறுகின்றன. அவர் இந்தப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டதையடுத்து, பின்லாந்தின் முன்னாள் பிரதமர் டர்ஜா ஹலோனென் பெயர், நிபுணர் குழுவின் தலைவர் பதவிக்கு முன்மொழியப்பட்டது. அதுமட்டுமின்றி, முன்னர், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் தலைவரான மர்சுகி தருஸ்மன் பெயரும் பரிசீலனையில் இருந்தது. எனினும், நியூசிலாந்தின் முன்னாள் நீதிபதியும்- அங்கு ஆளுநராகப் பணியாற்றியவருமான டேம் சில்வியா கார்ட்ரைட் என்ற பெண்மணியின் பெயரே, நிபுணர் குழுவின் தலைவர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

ஐ.நாவின் உயர்மட்டத் தகவல்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ள போதிலும் இது இன்னமும் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. அதுமட்டுமின்றி, இரண்டாவது நிபுணர் யார் என்பதும் கூட அறிவிக்கப்படவில்லை. வெறுமனே அவர் ஒரு சூடான் நாட்டவராக இருக்கலாம் என்ற ஊகங்கள் மட்டும் பரவியுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தனது கடைசி தலைமை உரையை நிகழ்த்தியிருந்தார். அதில், அவர், இரண்டு நிபுணர்களை உள்ளடக்கிய விசாரணைக்குழு பற்றிய முழு விபரங்களையும் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எவரது பெயரையும் குறிப்பிட்டு, விசாரணைக் குழு பற்றிய அறிவிப்பை அவர் வெளியிடவில்லை. தனியே, ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது



என்பதைத்தான், அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த விசாரணைக் குழு பக்கச்சார்பு பற்றிய எந்தக் குற்றச்சாட்டுக்களுக்கும் அகப்படாமல் இருக்க வேண்டும் என்பதாலும்- பொருத்தமான நிபுணர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதாலும், நவநீதம்பிள்ளை இந்த நியமனங்களில் கடுமையான சவால்களை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அதனால்தான், இந்த விசாரணைக் குழுவை அறிவிப்பதில், நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது. விசாரணைக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஐ.நா. பொதுச்சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதிலும் தாமதம் ஏற்பட்டதால்தான், கிட்டத்தட்ட விசாரணைகளைத் துவங்குவதற்கு மூன்று மாதங்கள் பிடித்துள்ளன.

விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள ஐ.நா. குழுவை வழி நடத்தும், நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கவுள்ள 70 வயதான டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார், கம்போடியாவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின், இரண்டு நீதிபதிகளில் ஒருவராகப் பணியாற்றியவராவார்.

நியூசிலாந்தின் முதல் பெண் மாவட்ட நீதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் என்பதுடன், நீதிபதியாக இருந்தபோது, மிகச் சிறப்பாகப் பணியாற்றியதற்காக பல கௌரவ விருதுகளையும் பெற்றவர். இவர் பெண்களுக்கெதிரான பாகுபாடுகளைக் களைவதற்கான குழுவிலும் முக்கிய பங்காற்றியுள்ளார். அதேவேளை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அதிகாரிகள் குழுவுக்குத் தலைமை தாங்கவுள்ள ஐ.நாவின் மூத்த அதிகாரி, சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார், மிகவும், தகைமை வாய்ந்த- அனுபவம்மிக்க விசாரணையாளர் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவர், விசாரணைக் குழுவில் மூத்த இணைப்பாளர் என்ற பாத்திரத்தை வகிப்பார். இது ஐ.நாவின் பி 5 நிலைப் பதவியாகும். ஐ.நாவின் மூத்த அதிகாரிகள் வரிசை பி 1 தொடக்கம் பி7 வரை உள்ளது. பி 5 என்பது நடுத்தர நிபுணர்களின் தரவரிசையில் உள்ளதாகும்.

முதுநிலைப்பட்டதுடன், 10 ஆண்டுகள் ஐ.நா. சேவையில் உள்ளவர்களும் மட்டுமே இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்படுவர். சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார், ஐ.நாவில் 15 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

விசாரணையுடன் சம்பந்தப்பட்டோருடன் இணைந்து பணிகளையும் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பது, அறிக்கை தயாரிப்பை மேற்பார்வையிடுவது, ஆவணப்படுத்தல் என்பன இவரது பணி என்று இந்த விசாரணைக்கான ஐ.நா. வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. ஹெய்ட்டி, கொங்கோ, நேபாளம் ஆகிய நாடுகளிலும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்திலும் பணியாற்றியவர். தென் சூடானில் பணியாற்றிய போது, 2012 ஆம் ஆண்டு இவர் அந்த நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். தென்சூடான் படையினரின் அத்துமீறல்கள் குறித்து ஐ.நா. வெளியிட்ட அறிக்கையே இவர் அங்கிருந்து வெளியேற்றப்படக் காரணமாகும். இதனால், இவரது பெயர் உலகெங்கும் பிரபலம் பெற்றது.

இந்த இரண்டு பேர் தவிர, வேறு எவரது பெயர்களும் வெளியிடப்படவில்லை. எனினும் இந்த விசாரணைக் குழுவில், மேலும் 10 மாதங்கள் பணியாற்றும், மூத்த மனித உரிமை விசாரணையாளர் ஒருவரும் உள்ளடங்குகிறார்.

அத்துடன் 8 மாதங்களுக்குப் பணியாற்ற சட்ட ஆலோசகர் ஒருவரும், எட்டு மாதங்களுக்குப் பணியாற்ற இரண்டு மனித உரிமை விசாரணையாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். மேலும் நிர்வாக உதவியாளர் ஒருவர், 10 மாதங்களுக்கு விசாரணைக் குழுவுடன் இணைந்து பணியாற்றுவார். 3 மாதங்களுக்கு சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் நியமிக்கப்படுவார். தடயவியல் நிபுணர் ஒருவர், 3 மாதங்களுக்கு ஆவணப்படுத்தல் ஆலோசகர் ஒருவர், 2 மாதங்களுக்கும், விசாரணைக் குழுவுடன் இணைந்து பணியாற்றவுள்ளனர். இந்த விசாரணைக் குழு 2014 ஜூன் நடுப்பகுதி தொடக்கம், 2015 ஜூன் நடுப்பகுதி வரையான 10 மாதங்கள் செயற்படும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

விசாரணைக் குழுவுடன் ஒத்துழைத்து குற்றங்கள் ஏதும் நடக்கவில்லை என்று நிரூபிப்பதற்கும் முடியாமல், குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்கவும் முடியாமல்- திரிசங்கு நிலைக்குள்தான் இந்த விசாரணை, அரசாங்கத்தைக் கொண்டு செல்லப் போகிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுகளின் தடயங்களை ஆவணப்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின்

எங்கு பார்த்தாலும் பேரினவாதிகளின் கோரத்தாண்டவத்தின் காரணமாக பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள், கடைகள், வீடுகள் என பல்வேறு வகையான அழிவுகளையே பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறான தடயங்களை அழித்து விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் தெரிவித்தார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ஆசு.நஜா முஹம்மத் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஷ்ஷெய்க் ஐயூப் அஸ்மின் ஆகியோர் அளுத்கமவிற்கு விஜயம் மேற்கொண்டனர்.



மேற்படி பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் பேரினவாதிகளின் கோரத்தாண்டவத்தின் காரணமாக பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள், கடைகள், வீடுகள் என பல்வேறு வகையான அழிவுகளையே பார்க்கக் கூடியதாகவுள்ளதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் தெரிவித்தார்.

இவ்வாறான நாசகார வேலைகளின் தடயங்களை அழித்து விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ்வாறான முக்கிய தடயங்களாகவுள்ள இவ்வழிவுகள் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும எனவும், அவை கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்போடு செய்யப்படுதல் வேண்டும் எனவும் அவர் அப்பகுதி மக்கள் மற்றும் ஊர் தலைவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே இவவாறான தடயங்களாகவுள்ள இவ்வழிவுகளை உடனடியாக துப்புரவு நடவடிக்கைகளை மேற்கொண்டு அழித்துவிட வேண்டாம் என பொதுமக்களிடத்தில் வினயமாகக் கேட்டுக்கொண்டுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை தெரிவிக்கின்றது. (அ)

# இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்-பான் கீ மூன்



ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன், இலங்கையின் தென்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளதுடன், சகல இலங்கை மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் மற்றும் சிறுபான்மை சமூகத்தினர் மீதான தாக்குதல்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அவர் மீளவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்மானத்திற்கு அமைவாக சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் மீது த்தாக்குதல்கள் நடத்தப்படுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஒருசில தினங்களுக்கு முன்னர் பொலிவியாவில் நடைபெற்ற G77 உச்சி மாநாட்டின் போது, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனை ஜனாதிபதி மஹிந்த சந்தித்து இரு தரப்பு பேச்சு நடத்தியிருந்தார்.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அளுத்கம வன்முறை குறித்து உரிய நடவடிக்கை எடுப்போம்

## முஸ்லிம் நாடுகள் உறுதியளிப்பு

(கொழும்பு)

அளுத்கம உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முஸ்லிம் நாடுகள் நேரடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆறு முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உறுதியளித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு அவரை அவரது இல்லத்தில் அவசரமாக சந்தித்து கலந்துரையாடியபோதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த முக்கிய சந்திப்பில் ஈரான், கட்டார், ஆப்கானிஸ்தான், குவைத், பாகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய ஆறு நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் ஹக்கீம் குறித்த முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களுக்கு அளுத்கம சம்பவம் தொடர்பில் மிகவும் ஆழமாக விளக்கிக் கூறியதுடன் அதன் பின்னணிகள் குறித்தும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

பொதுபல சேனா என்கின்ற பேரின கடும்போக்கு- தீவிரவாத இயக்கத்தினரின் இந்த திட்டமிட்ட தாக்குதல்களினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், உயிர் மற்றும் உடைமை இழப்புகள் தொடர்பிலும் தற்போதைய களநிலவரம் பற்றியும் இதன்போது அமைச்சர் ஹக்கீம் விளக்கமளித்தார்.

இவற்றை கேட்டறிந்து கொண்ட தூதுவர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களின் இக்கட்டான நிலைமை குறித்து தமது நாடுகள் கவலை கொண்டிருப்பதாகவும் அவர்களின் உயிர், உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மிகவும் பொறுப்புணர்வுடன் முயற்சிகளில் ஈடுபட தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டனர்.

குறிப்பாக இப்பிரச்சினைகள் தொடர்பில் தமது நாடுகளின் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசாங்க உயர் மட்டத்தினருடன் நேரடியாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என தூதுவர்கள் உறுதியளித்தனர்.

அத்துடன் இன்று இடம்பெறவுள்ள முஸ்லிம் நாடுகள் கூட்டமைப்பின் மாநாட்டிலும் இலங்கை முஸ்லிம் சமூகம் தற்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து பிரஸ்தாபித்து அதன் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தூதுவர்கள் உறுதியளித்தனர் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் மு.கா. குழுத் தலைவருமான எ.எம். ஜெமீல் தெரிவித்தார். (அ)

# இன்று ஒரு தகவல்

## நமது நிழல்!

கொஞ்சம் வசதியான ஆள் ஒருவன் இருந்தான். தாராள குணம் உடையவன். மற்றவர்களுக்குத் தன்னால் இயன்றளவு உதவி செய்வான். ஆனால் அவனுடைய மனைவியோ மகா கருமி! அதுமட்டுமல்ல... தனது கணவனையும் அடுத்தவருக்கு உதவி செய்யவிடமாட்டாள்.

அந்த ஆள் மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று நினைத்தால் கூட அவளை அறியாமல் தான் செய்யவேண்டும்.

ஒரு சமயம் அந்த அம்மா பிறந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது. நடந்தே போகலாம் என்று நினைத்து இருவரும் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

அது கோடைகாலம் ஆனபடியால் சரியான வெயிலாக இருந்தது. காலில் செருப்புக்கூட போடாமல் வெறும் காலோடுதான் போய்க் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் வரும் வழியில் நிழல் தரும் மரம் கூட இருக்கவில்லை. கடுமையான வெப்பம் வாட்டி வதைத்தது. கால்கள் சூடு தாங்கமுடியவில்லை.

"கால் சுடுகிறதே... என்ன செய்வது?" என்றார் அந்த அம்மா. மனைவி தவிக்கிறதைப் பார்த்த கணவன், "ஏன் இப்படித் தவிக்கிறாய்? உனக்குத்தான் உடம்பு பெரியதே! உன்னுடைய உடம்பின் நிழல் பூமியில் விழுமல்லவா! அந்த நிழலின்மேல் நின்று உடல் சூட்டைத் தணிக்கலாமே" என்று யோசனை சொன்னான்.

அந்த அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது. "என்ன உளறுகிறீர்கள்? என்னுடைய நிழலின் மேல் நான் எப்படி நிற்கமுடியும்?" என்றாள். இப்பொழுது அந்தக் கணவன் சொன்னான்.

"கொஞ்சம் சிந்தித்துப்பார் உன்னுடைய நிழலே உனக்கு உதவமுடியவில்லை. நீ பெட்டியில் பூட்டி வைத்திருக்கும் பணமா உனக்குப் பிற்காலத்தில் உதவப்போகிறது" என்றான்.

அந்த அம்மாவுக்குப் புத்தியில் ஒரு தெளிவு உண்டாகியது. மகான்களுக்கெல்லாம் மரநிழலில் தான் ஞானம் உண்டாகும். இந்த அம்மாவுக்கு உச்சி வெயிலில் ஞானம் உண்டாகிறது.

இது கிருபானந்தவாரியார் கூறிய கதை. இதைக் கேட்டதும் எனக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது. ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். மகா கருமி. பணம் சேர்க்கத் தெரியுமே தவிர செலவழிக்கத் தெரியாது. அவனுக்கு மூன்று பிள்ளைகள். பிள்ளைகள் மூவருமே தன்னைப்போலவே கருமியாக இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

அவனுக்குக் கடைசிக்காலம் நெருங்கிவிட்டது. மரணத்தை எதிர்கொள்ளும் தறுவாயில் இருந்தான். மூத்த பிள்ளையைக் கூப்பிட்டான். "நான் இறந்தால் என்னை எப்படி அடக்கம் செய்வாய்?" என்று கேட்டான்.

"உனக்கு சந்தனப் பலகையால் பெட்டிசெய்து அதில் உன்னை வைத்து பட்டுத்துணியால் மூடி கௌரவமாக கொண்டுபோய் அடக்கம் செய்வேன்" என்றான் அவன். மகனைப் பளார் என்று அறைந்தான் தகப்பன். "சந்தன மரமும் பட்டுத்துணியும் எவ்வளவு செலவாகும். ஊதாரியாக போய்விடுவாய் போல இருக்கிறதே" என்றான்.

இரண்டாவது பிள்ளையைக் கூப்பிட்டு அதேகேள்வியைக் கேட்டான். அண்ணன் அறை வாங்கியதைப்பார்த்த அவன் ஜாக்கிரதையாக பதில் சொன்னான்.

"நான் உனக்கு கள்ளிப்பலகையால் பெட்டி செய்து துணி எதுவும் போர்த்தாமல் கொண்டுபோய் அடக்கம் செய்வேன்" என்றான் இரண்டாமவன். அவனுக்கும் அறை விழுந்தது.

"கள்ளிப்பலகை என்ன சும்மாவா கிடைக்கும்? காசு கொடுத்தால்தானே கிடைக்கும்" என்றான். கடைசியாக மூன்றாவது மகனை அழைத்தான். அதே கேள்வியைக் கேட்டான். "நான் உனக்காக செலவு செய்யவே மாட்டேன். உன்னை வைத்து பிழைத்துக்கொள்வேன்" என்றான் மூன்றாவது மகன்.

"எப்படி?" என்று கேட்டார் தகப்பன். "உன்னை துண்டு துண்டாக வெட்டி ஒரு கூடையில் போட்டு அதை தலையிலே சுமந்து ஆட்டுக்கறி" என்று சொல்லி விற்று காசாக்கி விடுவேன் என்றான்.

"நீதான் என்னுடைய பிள்ளை! அப்படியே விற்றுக் காசாக்கி விடு... ஆனால் அந்த மேலத்தெரு பக்கம் மட்டும் போகாதே!" என்றான்.

"ஏனப்பா?" என்று கேட்டான் மகன்.

"அங்கே இருக்கிறவன்பூரா கடனுக்குக் கேட்பான் கையில் காசுகூட தரமாட்டான்!" என்றார் தகப்பன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன இயக்கவியலும் இரசாயன சமநிலையும்: தவறான கருத்துக்களும் பொதுவான பிழைகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

$$-\{[A]_2-[A]_1\} = [B]_2-[B]_1$$

$$-\Delta[A] = \Delta[B]$$

எனவே $-\frac{\Delta[A]}{\Delta t} = \frac{\Delta[B]}{\Delta t}$ = தாக்க வேகம்

அல்லது வீதம். இப்போது $A \rightarrow 2B$ என்னும் தாக்கத்தைக் கருதுவோம். ஒவ்வொரு மூல் A தாக்கமடையும் போதும் இரண்டு மூல் B தோன்றும். எனவே $t_2-t_1$ என்ற நேர இடைவெளியில் தோன்றிய B இன் அளவு $\{[B]_2-[B]_1\}$

ஆனது மறைந்த A இன் அளவான $-\{[A]_2-[A]_1\}$ இன் இரண்டு மடங்காகும்.

$$[B]_2-[B]_1 = -2\{[A]_2-[A]_1\}$$

அல்லது $\frac{1}{2}\{[B]_2-[B]_1\} = -\{[A]_2-[A]_1\}$

$$\frac{1}{2}\Delta[B] = -\Delta[A]$$

எனவே $\frac{1}{2}\frac{\Delta[B]}{\Delta t} = -\frac{\Delta[A]}{\Delta t}$ = தாக்க வேகம்

ஆகவே பொதுவாக $aA+bB \rightarrow cC+dD$ என்றும் தாக்கத்திற்கு

தாக்கவேகம்

$$= -\frac{1}{a}\frac{\Delta[A]}{\Delta t} = -\frac{1}{b}\frac{\Delta[B]}{\Delta t} = \frac{1}{c}\frac{\Delta[C]}{\Delta t} = \frac{1}{d}\frac{\Delta[D]}{\Delta t}$$

என எழுதலாம்.

எந்த தாக்கி தொடர்பாகவோ எந்த விளைவு தொடர்பாகவோ தாக்க வேகத்தை எழுதினாலும்

தாக்க வேகத்திற்கு அலகு

= செறிவு மாற்றத்தின் அலகு / நேர மாற்றத்தின் அலகு


= செறிவின் அலகு / நேரத்தின் அலகு

$= \frac{mol\,dm^{-3}}{s}$ அல்லது $\frac{mol\,\ell^{-1}}{s}$

$= mol\,dm^{-3}s^{-1}$ அல்லது $mol\,\ell^{-1}s^{-1}$

ஆகவே இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.


இப்போது $A+B \rightarrow C+D$ என்னும் ஒரு எளிமையான ஒரு படியில் நிகழும் தாக்கத்தைக் கருத்தில் கொள்ளுங்கள். A இனதும் B இனதும் செறிவுகள் குறைவெனில், A,B மூலக் கூறுகள் பொதுவாக ஒன்றிலிருந்து ஒன்று தொலைவிலேயே இருக்கும் (படம் 5)




(படம் 5)

இதனால் தாக்கம் நிகழும் சாத்தியம் குறைவு. எனவே தாக்கம் மெதுவாகவே நிகழும்.

A,B இரண்டுமே கரைசலில் செறிவாக இருந்தால் இரண்டு மூலக்கூறுகளும் அருகருகே வருவதற்கு சாத்தியம் அதிகம் (படம்6)




(படம் 6)

எனவே தாக்கம் நிகழ அதிக சந்தர்ப்பம் உண்டு. எனவே தாக்க வேகம் பெரிதாக இருக்கும் என்று கூறலாம்.

எனவே தாக்க வேகமானது தாக்கிகளின் செறிவில் தங்கியிருக்கும் என நாம் கூறலாம். விளைவுகள் C உம் D உம் தோன்றியிருந்தாலும் தோன்றாவிட்டாலும் தாக்கம் நிகழ A உம் B உம் மட்டுமே தேவை. எனவே தாக்க வேகத்தின் அளவு விளைவுகளின் செறிவிலோ அளவிலோ தங்கியிராது.

எனவே தாக்க வேகம்

$$= -\frac{\Delta[A]}{\Delta t} = \frac{\Delta[B]}{\Delta t} \propto [A][B] = k[A][B]$$

என எழுதலாம். இச் சமன்பாடு வீதவிதி எனப்படும்.

இங்கு k ஆனது வீத மாறிலி அல்லது வேக மாறிலி எனப்படும். இந்த வகையான சமன்பாட்டிலிருந்துதான் k இன் அலகு துணியப்படும்.

தற்போது $A+2B \rightarrow C+D$ என்பதுதான் தாக்கம் என்று வைத்துக்கொள்வோம். இதனை,

$A+B+B \rightarrow C+D$ என்றும் எழுதலாம். எனவே தாக்க வேகம் $\alpha [A][B][B]$

$\alpha [A][B]^2$

$= k[A][B]^2$ ... சமன்பாடு 1

ஆக இருக்கும் என்று நாங்கள் நினைக்கலாம். (வெவ்வேறு தாக்கங்களுக்கு k இன் பெறுமானம் வேறாக இருக்கும். இங்கு k என்ற குறியீடு ஒரு மாறிலியைக் காட்டவே பயன்படுத்தப்படுகிறது.)

இப்போது $A+2B \rightarrow C+D$ என்னும் இந்தத் தாக்கம் பின்வருமாறு இரண்டு படிகளில் நிகழ்கின்றது என எடுத்துக் கொள்வோம்.

முதலாம் படி $A+B \rightarrow E$ (மெதுவானது என்போம்)

இரண்டாம் படி $E+B \rightarrow C+D$ (விரைவானது என்போம்)

மொத்தத் தாக்கம் $A+2B \rightarrow C+D$

இங்கு E என்பது ஒரு இடைநிலைச்சேர்வை, விளைவல்ல. E ஆனது இரண்டாம் படியில் B உடன் தாக்கமடைந்து விளைவுகளான C ஐயும் D ஐயும் தருகின்றது.இப்படி விரைவானது.

எனவே E தோன்றியவுடன் அது அங்கு எஞ்சியுள்ள B உடன் தாக்கமடைந்து விளைவுகளைத் தந்துவிடும். E தோன்றுவது தான் மெதுவாக நடைபெறுகிறது.

எனவே விளைவுகள் இரண்டாம் படியில் தோன்றும் வேகமானது, முதலாம் படியில் E தோன்றும் கேவத்தினாலேயே நிர்ணயிக்கப்படும் என நாம் எதிர்பார்க்கலாம்.

எனவே,

தாக்க வேகம் = முதலாம் படியின் வேகம்.

$\alpha [A][B]$

$= k[A][B]$...சமன்பாடு 2

இதனால் மிக மெதுவான படியானது வீதத்தை நிர்ணயிக்கும் படி என்படும்.

இப்போது $A+2B \rightarrow C+D$ என்னும் தாக்கத்தின் வீதவிதி சமன்பாடு 1 இனால் தரப்படுமா அல்லது சமன்பாடு 2 இனால் தரப்படுமா என்ற கேள்வி எழுகிறது.

இற்கான விடை: 'இத்தாக்கம் ஒரு படியில் நிகழ்ந்தால் வீத விதியானது சமன்பாடு 1 இனால் தரப்படும்.

ஒன்றிற்கு மேற்பட்ட படிகளில் நிகழுமானால் அவற்றின் சார் வேகங்களை வைத்தே வீத விதியைக் கண்டு பிடிக்கலாம்.

எனவே பல படிகளில் நிகழுமானால் வீத விதியைத் திருத்தமாகக் கூறமுடியாது.'

எனவே பல படிகளில் இத் தாக்கம் நிகழுமானால்,

தாக்கவேகம் $= k[A]^x[B]^y$ என எழுதலாம்.

x,y என்பவற்றின் பெறு மானங்கள் படிகள் பற்றிய விபரத்திலிருந்தோ அல்லது பரிசோதனை மூலமாகவோ கண்டு பிடிக்கப்படும்.

இந்தக் கூற்று எத்தனை தாக்கிகள் இருந்தாலும் பொருந்தும். உதாரணமாக,

$aA+bB+cC \rightarrow$ விளைவுகள் என்பது தாக்கமெனில்


தாக்கவேகம் $= k[A]^x[B]^y[C]^z$ ஆகும். இத்தாக்கம் ஒரு படியில் நிகழ்ந்தால் $x=a$, $y=b, z=c$ ஆகும்.

இல்லையேல் x,y,z (இவை முறையே தாக்கத்தின் A தொடர்பான B தொடர்பான, C தொடர்பான வரிசைகள் எனப்படும்) என்பன் தாக்கத்தின் பொறிமுறையிலிருந்தோ அல்லது பரிசோதனை மூலமாகவோ கண்டுபிடிக்கப்பட வேண்டும்.


இதன் பிறகுதான் k இன் அலகை நாங்கள் துணியலாம் என்பதையும் தாக்க வேகத்திற்கான மேற்படி சமன்பாட்டில் விளைவுகளின் செறிவு வராது என்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

### 6. ஆரம்ப வீதம் (Initial rate)

$A+B \rightarrow C$ என்னுமொரு தாக்கத்தை கருதுவோம். தாக்கமொன்றில் தாக்கங்களினதும் விளைவுகளினதும் செறிவுகள் மாறும் விதம் ஏற்கனவே பகுதி 5 இல் விளக்கப்பட்டுள்ளது. கீழுள்ள படங்கள் 7 இலும் 8 இலும் A இனதும் C இனதும் செறிவுகள் நேரத்துடன் மாறும் விதம் காட்டப்பட்டுள்ளது.




படம் 7




படம் 8

A,B என்பவற்றின் ஆரம்ப செறிவுகள் முறையே $[A]_o$,$[B]_o$ ஆகும். Cயின் ஆரம்ப செறிவு பூச்சியம்.

ஒரு மிகச் சிறிய நேர இடைவெளி t இன் பின் A,B,C என்பவற்றின் செறிவுகள் முறையே [A],[B],[C] என்போம். இச் சிறிய நேர இடைவெளியில்,

தாக்கவீதம் $= -\frac{\{[A]-[A]_o\}}{t}$ அல்லது

தாக்க வீதம் $= \frac{[C]-0}{t}$

வீதவிதியின்படி தாக்க வேகமானது அந்த நேர இடைவெளியில் A இனதும் B இனதும் சராசரிச் செறிவுகளை ஒவ்வொன்றிற்கும் உரிய ஏதோ ஒரு அடுக்கு உயர்த்தப்பட்டு




பின் பெருக்கப்பட்டுக் கிடைக்கும் பெறுமானத்திற்கு நேர் விகித சமனாகும்.

தாக்கவீதம் $\alpha [A]^x_{av} [B]^y_{av}$

இங்கு $[A]_{av}$, $[B]_{av}$ என்பன அச் சிறிய நேர இடைவெளியில் A,B என்பவற்றின் சராசரிச் செறிவுகள்.

சிறிதளவு தாக்கமே நடைபெற்றது என்பதனால் இச் சராசரிப் பெறுமானங்கள் $[A]_o$, $[B]_o$ என்பவற்றிக்கு அண்மித்தவை யாகவே இருக்கும். எமது தேவையைப் பொறுத்த வரை,

$$[A]_{av} = [A]_o$$
$$[B]_{av} = [B]_o$$

என எடுத்துக் கொள்ளலாம். எனவே தாக்க வீதம் $\alpha [A]^x_o [B]^y_o$

$= k[A]^x_o [B]^y_o$

மேலும்

தாக்க வீதம் $= -\frac{\{[A]-[A]_o\}}{t} = \frac{[C]}{t}$ ...சமன்பாடு 4

ஏதோ ஒரு விதத்தில், [A] அல்லது [C] தெரியும் என வைத்துக் கொள்வோம். எனவே தாக்க வீதத்தைச் சமன்பாடு 4 இன் மூலம் கணிக்கலாம். இதனைத் (தாக்கவீதம்) என்போம்.

இது $k[A]^x_o [B]^y_o$ இற்கு சமனாகும்.

இங்கு ஆரம்பச் செறிவுகளான $[A]_o$, $[B]_o$ என்பன எங்களுக்குத் தெரிந்த பெறுமானங்களாகும்.

$(\text{தாக்கவீதம்})_1 = k[A]^x_o [B]^y_o$

இன்னொரு பரிசோதனையில் B இன் ஆரம்பச் செறிவு மாறாதிருக்க, A இன் ஆரம்பச் செறிவை $[A]_o/2$ ஆக வைத்துத் தாக்க வீதம் துணியப்படுகிறது எனக் கொள்வோம். இதனைத் $(\text{தாக்கவீதம்})_2$ என்போம்.

$$(\text{தாக்க வீதம்})_2 = k\left\{\frac{[A]_o}{2}\right\}^x [B]_o^y$$

எனவே,

$$\frac{(\text{தாக்க வீதம்})_1}{(\text{தாக்க வீதம்})_2} = 2^x$$

இதிலிருந்து x ஐக் கணிக்கலாம். பொதுவாக x,y என்பன முழு எண்களாவே இருக்கும் என எடுத்துக் கொள்ளலாம்.

இதேபோன்ற ஒரு முறையைப் பயன்படுத்தி y ஐயும் கணிக்கலாம். இறுதியாக $(\text{தாக்கவீதம்})_1 = k[A]^x_o [B]^y_o$ (அல்லது வேறு சமன்பாடு என்னும் சமன்பாட்டிலிருந்து k ஐத் துணியலாம்.

சில வேளைகளில் வெவ்வேறு ஆரம்பச் செறிவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு A அல்லது B தாக்கமடைய எடுத்த நேரம் அல்லது ஒரு குறிப்பிட்ட அளவு C தோன்ற எடுத்த நேரம் தரப்படும்.

உதாரணமாக ஒரு குறிப்பிட்ட அளவு A தாக்கமடைய எடுத்த நேரம் t தரப்படுகிறது எனக் கொள்வோம்.

ஒரு லீற்றரில் தாக்கமடைந்த A இன் அளவு $\{[A]_o-[A]\}$ ஆகும். இது ஒரு மாறிலி எனவே,

$$\text{தாக்க வீதம்} = -\frac{\{[A]-[A]_o\}}{t}$$

$$\alpha \frac{1}{t}$$

மேலும்

$$\frac{(\text{தாக்க வீதம்})_1}{(\text{தாக்க வீதம்})_2} = \frac{t_2}{t_1}$$

இப்படியான சந்தர்ப்பங்களில் மேலுள்ள உதாரணத்தைப் போன்ற கணிப்புக்களுக்குத் தாக்கவீதம் $\alpha \frac{1}{t}$ என்பதைப் பயன்படுத்தி x,y,k என்பனவற்றைக் கணிக்கலாம்.

### 7. சமநிலை மாறிலி

இப்போது இரண்டு திசைகளிலும் நடைபெறக்கூடிய ஒரு தாக்கத்தைக் கருத்தில் கொள்வோம். உதாரணமாக.

$$A+B \rightleftharpoons C+D$$

A உம் B உம் தாக்கமடையும்போது C உம் D உம் விளைவுகள் C உம் D உம் தாக்கமடையும் போது A உம் B உம் விளைவுகள்.

இரண்டு புறமாகவும் இத்தாக்கம் நிகழ்வதனால் அத்தாக்கங்கள் இலகுவாக சிக்கல்கள் ஏதுமின்றி ஒரு படியில் நிகழ்கின்றன என எடுத்துக் கொள்ளலாம்.

ஆரம்பத்தில் A உம் B உம் மட்டுமே முறையே $[A]_o$,$[B]_o$ என்னும் செறிவுகளில் இருந்தன என்க. எனவே ஆரம்பத்தில் $C+D \rightarrow A+B$ என்னும் பின்முகத் தாக்கம் நிகழாது. எனவே பின்முகத் தாக்கத்தின் வேகம் ஆரம்பத்தில் பூச்சியம் எனலாம்.

தாக்கம் நிகழ, நிகழ A இனதும் B இனதும் செறிவுகள் குறைவடையும் புதிய செறிவுகளை [A],[B] என்போம்.

செறிவுகள் குறை வதனால் முன்முகத் தாக்கமான $A+B \rightarrow C+D$ இன் வேகமும் குறையும்.

முன்முகத் தாக்கத்தின் வேகம் $\alpha [A][B]$

$= k_f [A][B]$

இங்கு $k_f$ என்பது முன்முக (forward) தாக்கவீத மாறிலி ஆகும். தற்போது C உம் D உம்தோன்றிக்கொண்டுஇருப்பதனால் [C] உம் [D] உம் அதிகரிக்கப் பின் முகத்தாக்க வீதமும் அதிகரிக்கும். (அடுத்த வாரம் தொடரும்)

(அடுத்த வாரம் தொடரும்)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி.மு.க.விற்கு
# குட்பை சொன்ன குஷ்பு

"என் மனதில் மிக உயர்ந்த மனிதர் தலைவர் கலைஞர். அவர் எனக்குக் கழகத் தலைவர் இல்லை. என்னுடைய அப்பா!" - தி.மு.க-வில் இருந்து விலகுவதாக அறிவித்த குஷ்பு. அடுத்த சில நிமிடங்களில் தனது டுவிட்டர் வலைத்தளத்தில். கனத்த இதயத்துடன் இப்படி டுவீட் செய்திருந்தார்.

"என் அர்ப்பணிப்பும் உழைப்பும் ஒருவழிப் பாதையாகவே தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலை கழகத்தில் உள்ளபோது: நான் தேர்ந்தெடுத்த பாதையும் பயணமும் தாங்க இயலாத மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே தி.மு.க-வில் இருந்து விலகுவது என்ற முடிவை கனத்த இதயத்துடன் மேற்கொள்கிறேன்" இப்படி குஷ்புவின் அறிக்கையில் உள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் வலியும் வேதனையும் நிறையவே தெரிந்தது.

கட்சியில் சேர்ந்த நாளில் இருந்து பவர்ஃபுல்லாக இருந்த குஷ்புவுக்கு பிரச்சினை வெளிப்படையாகத் தொடங்கியது கடந்த 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான். அந்த சமயத்தில் ஆனந்த விகடனுக்கு அவர் அளித்த பேட்டியில்.

"தி.மு.க-வுக்கு அடுத்த தலைவர் ஸ்டாலின்தான் என்று நாமளே ஒரு முடிவுக்கு வந்துடக் கூடாது. தலைவர் என்ன சொல்லியிருக்கார்னா. எனக்கு அப்புறம் சமூகப் பணிகளைத் தளபதி செயற்படுத்துவார்னுதான். தி.மு.க தலைவரைத் தேர்ந்தெடுக்க தனக்கு ஒரு வாய்ப்பு கிடைச்சா. தளபதிதான் அவரோட சாய்ஸ்னு சொல்லியிருக்கார். ஆனா. இறுதி முடிவைப் பொதுக்குழுதான் எடுக்கும். 'யார் கட்சித் தலைவர்'னு முடிவு பண்றப்போ. அதைப் பத்திப் பேசுவோம். என் வழி தலைவர் வழிதான்!" என்று சொல்லியிருந்தார் குஷ்பு. அந்தப் பேட்டிதான் அத்தனை பிரச்சினைகளுக்கும் பிள்ளையார் சுழி போட்டது.

அந்தப் பேட்டி வெளியான சமயத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்றுக்காக திருச்சி சென்றிருந்தார் குஷ்பு. அங்கே ஸ்டாலின் ஆதரவாளர்கள் குஷ்புவை சூழ்ந்துகொண்டு செருப்பு வீசினார்கள். கட்சியே ஸ்டாலின் என்று ஆன பிறகு. குஷ்புவின் இந்தப் பேச்சை தி.மு.க-வில் உள்ள யாரும் ரசிக்கவில்லை. அப்போதே குஷ்பு கட்சியில் இருந்து வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால். கருணாநிதிதான் குஷ்புவை அழைத்து சமாதானம் பேசினார். ஆனாலும் ஸ்டாலின் சமாதானம் ஆகவில்லை.


அந்த நிகழ்வுக்குப் பிறகு குஷ்பு தொடர்ந்து கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். தி.மு.க-வில் குஷ்புவின் ஒரே நம்பிக்கையாக இருந்தது கருணாநிதி மட்டும்தான். அதனால் இந்த முறை எப்படியும் தனக்கு தென் சென்னை தொகுதியில் எம்.பி ஸீட் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இருந்தார் குஷ்பு. தென் சென்னைக்கு ஸீட் கேட்டு பணமும் கட்டினார். ஆனால். வாய்ப்பு கிடைக்கவில்லை. தேர்தல் பிரசாரத்திலும் குஷ்புவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கருணாநிதி தலையிட்ட பிறகே குஷ்புவுக்கு சில தொகுதிகளில் பேச வாய்ப்பு வழங்கப்பட்டது. அப்போதும். "குஷ்புகூட நீங்க பிரசாரத்துக்கு போகணும் என்பது அவசியம் இல்லை. நீங்க உங்க வேலையைப் பாருங்க! அப்படியே போனாலும் ஒரு பொயின்ட் பார்த்தால் போதும்!" என்று கடசியில் உள்ள முக்கிய பிரமுகரிடம் இருந்து வேட்பாளர்களுக்கு உத்தரவு போனது. பிரசாரத்துக்குச் சென்ற குஷ்புவை வேட்பாளர்களும் நாசூக்காகத் தவிர்த்தனர். குஷ்புவின் பிரசாரத்தை கலைஞர் டி.வி-யும் ஒளிபரப்பவில்லை. குஷ்புவுக்கு இப்படி நெருக்கடிகள் தொடர்ந்தன.

இந்தச் சூழலில்தான் கருணாநிதி பிறந்த நாள் வந்தது. கோபாலபுரம் வீட்டுக்கு பூங்கொத்துடன் குஷ்பு வந்தார். கருணாநிதிக்கு வாழ்த்துச் சொன்னார். அவரிடம் ஆசீர்வாதம் வாங்கினார். ஸ்டாலின் உட்பட ஒட்டுமொத்த குடும்பமும் அங்கே கூடியிருந்ததால். குஷ்பு எதுவும் பேசவில்லை. அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

குஷ்பு மனவருத்தத்தில் இருக்கும் தகவல் தெரிந்து அவரை சமாதானம் செய்ய கடந்த சில தினங்களுக்கு முன்பு கருணாநிதி அழைத்துள்ளார். ஆனால். குஷ்பு செல்லவில்லை. அதன் பிறகு தனக்கு நெருக்கமானவர்களிடம். "நான் என் மனசுக்குத் தெரிஞ்சு எந்த தப்பு செய்யலை. கட்சியில சேர்ந்த நாளில் இருந்து என்னால் முடிஞ்சவரைக்கும் கட்சிக்காக உழைச்சேன். என் குடும்பத்துக்காக நான் செலவிட்ட நேரத்தைவிட. கட்சிக்காக செலவிட்ட நேரம்தான் அதிகம். ஆனால். அவங்க யாரும் அதைப் புரிஞ்சுக்கலையே... என்னை ஏதோ விரோதி மாதிரியேதான் பார்க்குறாங்க. தளபதிகூட இருக்கிறவங்க என் காதுபடவே என்னைத் திட்டுறாங்க. தளபதிகிட்ட இதைப் பற்றியெல்லாம் நான் பேசணும்னு நினைக்கிறேன். ஆனா. அவரு என்னைப் பார்க்குறதையே தவிர்த்துடுறாரு. இனி கட்சியில எல்லாமே தளபதிதான் என்பது முடிவாகிவிட்டது. நான் என்னதான் சொன்னாலும் அதை யாரும் ஏத்துக்கப்போறது இல்லை. தளபதி இராஜினாமா செய்வதாக அறிவிச்சப்ப. நான் அவரோட வீட்டுக்குப் போய் பார்க்கலாம்னு நினைச்சேன். ஆனா. அவர் குடும்பத்துல இருக்கிறவங்க என்னை வீட்டுக்குள்ளயே விடாம அவமானப்படுத்துவாங்க. அதனாலதான் போகல. தளபதி குடும்பத்துல யாருக்கும் என்னைப் பிடிக்கல. அவங்களா என்னை வெளியில போ... என்று சொல்வதற்குள் நானே கிளம்பிவிடுவதுதான் மரியாதை!" என்று சொல்லியிருக்கிறார்.

> **என் குடும்பத்துக்காக நான் செலவிட்ட நேரத்தைவிட, கட்சிக்காக செலவிட்ட நேரம்தான் அதிகம். ஆனால், அவங்க யாரும் அதைப் புரிஞ்சுக்கலையே... என்னை ஏதோ விரோதி மாதிரியேதான் பார்க்குறாங்க. தளபதி கூட இருக்கிறவங்க என் காதுபடவே என்னைத் திட்டுறாங்க. தளபதிகிட்ட இதைப் பற்றியெல்லாம் நான் பேசணும்னு நினைக்கிறேன். ஆனா, அவரு என்னைப் பார்க்குறதையே தவிர்த்துடுறாரு**



குஷ்பு அறிக்கை வெளியான சில நிமிடங்களில். கருணாநிதி வீட்டில் இருந்து அவரைத்தொடர்புகொண்டார்களாம். "இனி பேசுறதுக்கு எதுவும் இல்லை... குட் பை" என்று போனை கட் செய்தவர். சுவிட்ச்டு ஆஃப் செய்துவிட்டாராம்.

**ஜூனியர் விகடன்**

# மேர்வின் மகனை அரசியலுக்கு கொண்டுவர ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வரான மாலக்க சில்வாவை அடுத்த பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் வேட்பாளராக நிறுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக அலரி மாளிகையின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால். அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடாது மகனின் வெற்றிக்காக பணியாற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் கூறியுள்ளார்.

அத்துடன் மேர்வின் சில்வாவை தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கவும் ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

அமைச்சர் மேர்வின் சில்வா சார்ந்த துராவே சாதி இன மக்களின் வாக்குகளை கவர்வதற்காகவே ஜனாதிபதி மாலக்க சில்வாவை அடுத்த பொதுத் தேர்தலில் களமிறக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

துராவே சாதியை சேர்ந்த முக்கியமான வேட்பாளரான முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தும் நோக்கில். ஜனாதிபதி மாலக்க சில்வாவை தேர்தலில் நிறுத்த தீர்மானித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களில் பெரும்பாலான வாக்காளர்கள் துராவே சாதியை சேர்ந்த மக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மதங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் அனைத்து இனங்களின் பாதுகாப்பையும் அந்த நாட்டு அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்! அத்துடன் நாட்டில். மதங்களின் சுதந்திரத்தை பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கனடா கோரியுள்ளது.

மதங்களின் சுதந்திரம் தொடர்பான கனடாவின் [illegible] இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளால் உயிர்களும் சொத்துக்களும் அழிந்துள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக கனடா தமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது. இலங்கையில் தொடர்ந்தும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையாவும் மதச்சுதந்திரத்தை மீறும் [illegible] என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# குராம் ஷேக் கொலை வழக்கில் அரசியல் தலையீடுகள் வேண்டாம்

## பிரிட்டன் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானிய பிரஜையான குராம் ஷேக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசியல் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்குமாறு பிரித்தானிய ரொக்டேல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான சைமன் டெக்சுக் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குராம் ஷேக் கொலை சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங்கப்பட உள்ளதால். வழக்கு விசாரணைகளுக்கு தடைகள் ஏற்படும் என தெரியவருகிறது.

குறித்த கொலை வழக்கு தொடர்பாக பல தவணைகள் விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளதால் வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு அவர். மேல் நீதிமன்றத்தில் இருந்து விலகிச் சென்றால். சம்பவம் தொடர்பான சாட்சியாளர்களை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து விசாரிக்கும் நிலைமை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட வழக்கு தொடர்பில் அரசியல் தலையீடுகளை மேற்கொள்ளாது. நீதியான வகையில் வழக்கை விசாரிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்குமாறு அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாழ்வாதார தொழில்கள் இராணுவத்தால் பறிபோகின்றன

## முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அதிகளவிலான காட்டு மரங்கள் இராணுவத்தினரின் உதவியுடன் வெட்டப்பட்டு தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் முல்லை.மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வடமாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று மக்களின் குறைகளை கேட்டறிவதற்காக முல்லை. மாவட்டத்திற்கு சென்ற போதே மக்களினால் மேற்படி பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டது.

இக்குழு பாண்டியன்குளம், துணுக்காய், மல்லாவி, மாந்தை கிழக்கு போன்ற கிராம மக்களை சந்தித்தனர்.

இதன்போது அடிப்படை வாழ்வாதாரத் தொழிலாக விவசாயம் காணப்படுகின்ற நிலையில் எங்களின் நிலங்களையும் பண்ணைகளையும் இராணுவம் ஆக்கிரமித்து அவற்றில் விவசாயம் மேற்கொண்டு சந்தையில் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதால் தாம் மிகவும் கஷ்டப்படுவதாக கவலை வெளியிட்டனர்.

அத்துடன் இந்திய வீட்டுத்திட்டம் உட்பட வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு தேவையான மணல் மற்றும் மரம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

எனினும், படையினரின் உதவியுடன் கனரக வாகனங்களில் பெருமளவு மணல் மற்றும் பெறுமதியான காட்டுமரங்கள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

மேலும் வீதிகள், வடிகால்கள், ஏற்று நீர்ப்பாசன கால்வாய்கள் போன்றவை புனரமைக்கப்படாமலுள்ளதுடன் வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு குடும்பங்களிலுள்ள அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப முன்னுரிமை முறைமை கையாளப்படுவதால் போரில் பிள்ளைகளை இழந்திருக்கும் அல்லது பிள்ளைகள் புலம்பெயர் நாடுகளுக்கு சென்றிருக்கும் நிலையில் தனியாக வாழும் வயதான பெற்றோர் வீடில்லாமல் அல்லற்படும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

மக்களுடைய முறைப்பாடுகள் தொடர்பிலும் குறிப்பாக வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் வெளிநாட்டுத் தூதுவர்களுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வடமாகாண சபையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் தடையாகவிருப்பதாகவும் மக்கள் தங்கள் பிரச்சினைகளை எழுத்து மூலமாக தனக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் அப் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளப்படுமென்றும் முதலமைச்சர் உறுதியளித்தார்.

இதன்போது விவசாயம், கல்வி தொடர்பாக மக்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படி உரிய அமைச்சர்களுக்கு முதலமைச்சர் வலியுறுத்தினார். (9-250)

## திறப்பு விழா

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள இரணைமடு பொதுச் சந்தை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்குதிறந்துவைக்கப்படவுள்ளது.

பிரதேச சபையின் உறுப்பினர் ப.குமாரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நாவை. குகராசா, உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், பிரதேச சபை செயலாளர் இ.கிருஷ்ணகுமார், உறுப்பினர் மா.சுகந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வர்த்தகர்களிடம் கடைகள் கையளிப்பு, சந்தை வளாகத்தில் மரம் நாட்டல் போன்றன இடம்பெறவுள்ளன. (9-254)

## காணிகள் தொடர்பில் விசேட கருத்தமர்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் காணிகள் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிய விசேட கருத்தமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியதோடு மக்களுக்கு சில சட்ட நுணுக்கங்களையும் அறிவுரைகளையும் வழங்கினார். (9-6-250)

# வவுனிக்குளம் ஊடாக பயிர்ச்செய்கை முன்னெடுப்பு



(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான இக்குளம் கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படாமலிருந்தது.

இந்நிலையில் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்தல் என்னும் திட்டத்தின் கீழ் இக்குளத்தை புனரமைப்பதற்கு கடந்த 2012 ஆம் ஆண்டு 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தில் 320 மில்லியன் ரூபா செலவில் இக் குளம் புனரமைக்கப்பட்டதுடன் எஞ்சிய நிதியில் நீர்ப்பாசனக் கால்வாய்களும் கழிவு வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

தற்போது, இக்குளத்தின் ஊடாக 6 ஆயிரத்து 60 ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (9)

# மீள்குடியேற விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்க

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேற விரும்புவோரை எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன் அறிவித்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற் போது கிளிநொச்சி மாவட்டத்திலும் வெளி மாவட்டங்களிலும் வசித்து வருபவர்களே பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சொந்த இடங்களில் மீளக்குடியேற விரும்பும் குடும்பங்கள் தமது பெயர் விபரங்களை மேற்குறித்த திகதிக்கு முன்னர் கண்டாவளை பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9)




# வெட்டக்கச்சி பொதுச்சந்தையில் வர்த்தக நடவடிக்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பொதுச்சந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வர்த்தகர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தை புனரமைப்பு செய்வதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மரக்கறி சந்தை மாத்திரமே அமைக்கப்பட்டது.

இந்நிலையில், சந்தை திறந்து வைக்கப்பட்ட போதும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழல் நிலவியது.

எனினும், கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் இப் பொதுச் சந்தையுள்ளதனால் மீன், இறைச்சி சந்தைகள், நீர்த்தாங்கி, வேலிகள் என்பன சபையின் நிதியினூடாக கட்டப்பட்டது.

அத்தோடு, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக சுற்றுமதிலும் அமைக்கப்பட்டது.

மேலும், உலக தரிசன நிறுவனத்தினூடாக மலசலகூடமும் புனரமைக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக விடப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அரைகுறையாக விடப்பட்ட குறித்த சந்தை பல்வேறு பட்டவர்களின் நிதியுதவியோடு நிர்மாணிக்கப்பட்டு தற்போது வியாபார நடவடிக்கைகளுக்காக வர்த்தகர்களிடம் வழங்கப்பட்டுள்ள போதும் புறநெகும திட்டத்தினூடாக மேலும் கடைத்தொகுதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-254)

# பூநகரி வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

(பூநகரி)


பூநகரி பொது வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதனால் கடமையில் ஈடுபட்டுள்ள தற்காலிக வைத்தியரும் நோயாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு அன்றாடம் 125 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்நிலையில், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களையும் அங்குள்ள வைத்தியரே கவனிப்பதனால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, குறித்த வைத்தியரும் ஓய்வின்றி நீண்ட நேரம் நோயாளர்களை கவனித்து வருகின்றார்.

எனவே, சம்பந்தப்பட்டோர் நோயாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு நிரந்தர வைத்தியர்களை போதுமானளவு நியமிக்க சிபார்சு செய்ய வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-84)

சமூக சேவைகள் அமைச்சினால் சமூக பராமரிப்பு நிலைய [illegible] கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் செயலமர்வு இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:–சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய் தாலும் சூழ்நிலையை அனுசரித்துச் செய்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

# வடக்கின் முதலமைச்சர் செய்ய வேண்டியது என்ன?

வடக்கு மாகாண சபை தொடர்பில் பரவலாக விமர்சனங்கள் எழத் தொடங்கிவிட்டன. இத்தகைய விமர்சனங்கள், வடக்கு மாகாண அரசை பலவீனப்படுத்துமா? அல்லது பலப்படுத்துமா? என்ற கேள்விகளுக்கு குறித்த விமர்சனத்தை வடக்கு மாகாண சபை எப்படி எடுத்துக்கொள்கின்றது என்பதை பொறுத்தே பதில் அமையும்.

அதாவது, ஓர் அரசியல் தலைமையானது விமர்சனத்தை ஏற்கத் தயாராக வேண்டும். அதே நேரம் நியாயமான விமர்சனம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியமாகும்.

எனினும் வடக்கு மாகாண அரசு இது விடயத்தில் கவனம் செலுத்துவது போலத் தெரியவில்லை. அதிகாரங்கள் இன்னமும் நமக்குக் கிடைக்கவில்லை என்று சொல்வதில் இருக்கக் கூடிய உண்மைகளை நாம் நிராகரிக்கவில்லை. அதற்காக ஒரு மாகாண சபை தன்னால் செய்யக் கூடிய விடயங்களையாவது செய்யலாம் அல்லவா? அதைச் செய்யாதது ஏன் என்பதுதான் நம் கேள்வி?

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தமிழ் மக்கள் தங்களின் அதிகப்படியான விருப்பு வாக்குகளை வழங்கியிருந்தனர்.

இந்த விருப்பு வாக்கு என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கானது என்பதைவிட, சி.வி.விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்கள் கொண்ட அளவு கடந்த நம்பிக்கையால் ஏற்பட்டதாகும்.

அதே சமயம், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் அவர்கள் வருவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டனர் என்றும் சொல்ல முடியாது.

ஆக, இப்போது விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக வரவேண்டும் என ஆதரித்தவர்கள் – எதிர்த்தவர்கள் என இரு சாரார் உள்ளனர். இந்த இரு சாராரும் இப்போது வடக்கின் முதலமைச்சர் பணிக்கு இடையூறாக இருக்கிறார்களா என்பதும் ஆராயப்பட வேண்டும்.

அதாவது, ஆதரித்தவர்கள் முதலமைச்சரை தாமே ஆதரித்தது என்பதற்காக அவரைத் தமக்குச் சாதகமாகத் திசை திருப்பலாம். அதேபோல அவரை எதிர்த்தவர்கள் முதலமைச்சர் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் தடையாக இருக்கலாம்.

இந்த இரண்டும் அரசியலில் எதிர்பார்க்கக் கூடியவைதான். அதற்காக இரு சாராரையும் சமாளித்துப் போவது தான் ஒரேவழி என்று முதல் அமைச்சர் நினைத்தால், அவரின் நினைப்பு சாத்தியமாகுமே அன்றி அவரை நம்பி வாக்களித்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் ஒரு போதும் நிறைவேறமாட்டா.

எனவே, மேற்குறிப்பிட்ட விடயங்களில் எதனை நிறைவேற்றப் போகிறேன் என்பதை முதலமைச்சரே தீர்மானிக்க வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரை ஆட்சிபீடத்துக்கு வந்துவிட்டால் கட்சி வேறு; அரசு வேறு என்ற கொள்கையை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும். ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற எல்லையைத் தாண்டி வடக்கு மாகாண அரசை முன் நகர்த்த முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் முன்வரவேண்டும். இதற்காக நீண்ட நேரங்களை செலவிட வேண்டும். பல தியாகங்களை செய்ய வேண்டும். இதற்கு முன்னதாக நியாயமாக – நடுநிலையோடு – மண்பற்றோடு – இனஉணர்வோடு இருக்கக் கூடிய தமிழ் புத்திஜீவிகள் அடங்கிய ஆலோசனை சபை ஒன்றை அவர் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

அதே சமயம் எல்லா விழாக்களுக்கும் செல்லுதல் என்ற நடைமுறையையும் அவர் கைவிட வேண்டும்.

ஆலோசனை சபையின் கருத்துக்கு அமைய அதிரடியான செயற்பாடுகளை முன்னெடுப்பது உடனடித் தேவை. இதைச் செய்யத் தவறினால் வடக்கில் சமூகச் சீரழிவுகள், அடிபாடுகள், வாள்வெட்டுக்கள், கொலைகள், ஊழல்கள் என எங்கும் எல்லை மீறிய நாசங்கள் நடக்கும். கவனம்.

## வவு.கலைமகள் மகா வித்தியாலயத்தில்

# குளவி கொட்டியதில் 50ற்கு மேற்பட்டோர் காயம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை குளவி கொட்டியதில் 50ற்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் பாடசாலையின் மூன்றாவது மாடியிலிருந்த குளவிக் கூட்டிலிருந்து பறந்துவந்த குளவிகள் கொட்டியதில் அப்பாடசாலையின் தரம் 6, 7 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த பல மாணவர்கள் காயமடைந்தனர்.

இவர்களில் தரம் இரண்டைச் சேர்ந்த ஹர்மிஸ் என்ற மாணவனின் தலையில் 21 குளவிகள் கொட்டியதால் அம் மாணவன் கடுங்காயங்களுக்குள்ளானார்.

இவருடன் கடுங்காயங்களுக்குள்ளான பாடசாலையின் பகுதித்தலைவர் வடிவேல் செல்லத்துரை (வயது 52) மற்றும் உயர்தர வகுப்பு மாணவனான றேனுசன் (வயது 18) தரம் 6,7 வகுப்பு மாணவர்களான சங்கீதன் (வயது 13), சுபராஜ் (வயது 12), றஜனிதன் (வயது 12), டனுசன் (வயது 12), சதுர்சன் (வயது 12) ஆகிய மாணவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாதிப்புக்குள்ளான ஏனைய மாணவர்களும் ஆசிரியர்களும் வவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தனர். (செ-266)

# அவை விவாதம்; வெளியேறிய பிரதமர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவினர் இலங்கை வர இடமளிப்பதா, இல்லையா என்று நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்டுவரும் விவாதத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் நேற்று கலந்து கொள்ளாது பிரதமர் டி.எம்.ஜயரத்ன அவையில் இருந்து வெளியேறினார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி உரையாற்றி முடிந்ததும் பிரதமர் உரையாற்ற எழுந்து நின்றார்.

அப்போது சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார். அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுக்கு உரையாற்ற அனுமதி வழங்கினார்.

அப்போது பேசிய பிரதமர் இது தான் பேசவேண்டிய சந்தர்ப்பம்என்பதால் அதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கூறினார். எனினும் அந்த சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில், பிரதமர் நாடாளுமன்ற அவையில் இருந்து வெளியேறினார். (செ-11)

# வன்முறை குறித்த சம்பந்தனின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை என சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். எனினும், சம்பந்தனின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

திடீரென ஏற்பட்ட முரண்பாடுகளே வன்முறையாக வெடித்தது என குறிப்பிட்டுள்ளது.

இந்த சம்பவங்களை தூண்டி அதன்மூலம் அரசியல் இலாபமீட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ)

# வரட்சி வலயங்களில் நீர் மட்டம் குறைவு

(கொழும்பு)

வரட்சி வலய நீர்த்தேக்க பிரதேசங்களில், அண்மையில் மழை பெய்யாததன் காரணமாக, அவற்றின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சந்ரா கமலதாச தெரிவித்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்படும் சிறுபோக பயிர் செய்கையின் போது விவசாயிகள் சிக்கனமாக நீரை பயன்படுத்த வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நீர்ப்பாசன திணைக்களத்தினால், பாரிய அளவிலான 71 நீர்த்தேக்கம் மற்றும் குளங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. இதில் சிறியளவிலான் 300 குளங்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மூன்று கோடி ரூபா பெறுமதியான கஞ்சா மீட்பு

(கொழும்பு)

178 கிலோ கிராம் எடையுடைய கேரள கஞ்சா போதைப் பொருளைக் கடத்திய 3 இந்தியர்களை கல்பிட்டி மேற்கு கடற்பரப்பில் வைத்து கற்பிட்டி விஜய கடற்படை முகாம் அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

படகு மூலம் இலங்கைக்குள் கேரள கஞ்சா போதைப் பொருளை கொண்டுவர இந்த இந்தியர்கள் முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இந்தியர்களிடம் மீட்கப்பட்ட கஞ்சாவின் சந்தைப் பெறுமதி சுமார் மூன்று கோடி ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சாவ. நகராட்சி மன்றத்தால் திறந்த நூலகப்போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற உள்ளூராட்சி வார நிகழ்வுகளை முன்னிட்டு நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட வீடுகளில் திறந்த நூலகத்தை அமைத்துள்ள குடியிருப்பாளர் களுக்கிடையிலான போட்டிகள் இவ்வாரத்திற்குள் நடைபெறவுள்ளதாக சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதற்கமைய சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பொதுமக் கள் தமது முழுப்பெயர், முகவரி என்பவற்றை 021-227 0806 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்து பதிவுகளை மேற்கொள்ள முடியும்.


இப் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கான பரிசில்கள் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-29)

# சத்திய தரிசனம்



இந்த நிரந்தரமற்ற பௌதீக உலகில் மக்கள் இறைவனை பல்வேறு பெயர்களாலும் திருவடிவங்களாலும் வழிபடுகிறார்கள். ஆனால் இறைவனது பெயர் உண்மையில் அஹம் என்பதே. அதுவே நிரந்தரமானதும்கூட. நான்கு வேதங்களும் இந்த சத்தியத்தை நான்கு மஹா வாக்கியங்களில் குறிப்பிடுகின்றன. ப்ரக்ஞானம் பிரம்மா (ப்ரம்மனே மிக உயர்ந்த தெளிவு நிலை) அஹம் பிரம்மாஸ்மி (நானே பிரம்மன்), தத்வமஸி (நானும் அதுவே) அயம் ஆத்மா பிரம்மா (ஆத்மாவே பிரம்மன்) வேதங்கள் மேலும் அறிவிக்கின்றன. ஏகோஹம் பஹீஸ்யாம்! (ஒன்றே பலவாகக் காட்சி தர சங்கல்பித்தது).

நான் என்கின்ற தத்துவம் தேகத்திலிருந்து மாறுபட்டது. பொழுதுவிடிந்து பொழுது போனாலும் நான் என்கின்ற வார்த்தையே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அதன் உண்மையான அர்த்தம் புரியாமலே பயன்படுத்தப்படுகின்றது. வறுமையில் இருப்பவனாயினும் செல்வச் சீமானாய் இருப்பவனாயினும் நான் என்கிற தத்துவம் மட்டும் பொதுவானது.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தாழம்பூவை பூஜைக்கு பயன்படுத்துவதில்லை ஏன்?

ஒரு சமயம் பிரம்மனுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்று போட்டி வரவே சிவனை சந்தித்தனர். இருவரில் யார் தனது அடியையும் முடியையும் காண்கிறாரோ அவரே பெரியவர் என்றார் சிவன். அவர் சொன்னபடி இருவராலும் அடி முடியை காண முடியவில்லை. சிவனின் முடியிலிருந்து கீழே விழுந்த தாழம்பூ இதழைக் கண்ட பிரம்மன் சிவனின் முடியை தான் கண்டதாக பொய் சொல்லும்படி கூறினார். அதன்படி தாழம்பூ இதழும் பொய் சொன்னது. இதையறிந்த சிவன் பிரம்மனை வழிபாடுகளிலிருந்தும் தாழம்பூவை பூஜைலிருந்தும் ஒதுக்கினார் என்கிறது புராணம்.

இதன் மூலம் தான் என்ற அகந்தையை ஒழிக்க வேண்டும் என்றும் பொய் சொல்லக் கூடாது என்றும் உணர்த்தப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடி மேற்கு சனசமூக நிலைய

# மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி; சிவன் வி.கழகம் சம்பியன்



**வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் சிவன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது.**





கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான 9 பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிச்சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வளர்மதி விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது.

11.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களை பெற்றது.

93 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய சிவன் விளையாட்டுக் கழக் அணி 11.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை பெற்று மேலதிக 2 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

மேலும் இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாக சிவன் விளையாட்டுக்கழக செந்தூரனும் தொடர் ஆட்டநாயகன். சிறந்த துடுப்பாட்ட வீரனாக மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அஜந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(கு-29)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; யாழ்.இந்து அணி முதலிடம்



யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.இந்து கல்லூரி அணியினர் முதலிடத்தினை பெற்றுக் கொணடனர்.

யாழ்.மத்திய கல்லூரியின் 5 வருட தொடர் வெற்றிக்கு இம்முறை முற்றுப்புள்ளி வைக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மேசைப்பந்தாட்ட தொடரில் முதலாவதாக கிளி/பாத்திமா RCTMS கல்லூரியுடனும் அடுத்து வவுனியா சுந்தரபுரம் GTMS உடனும் விளையாடி அரையிறுதி போட்டிக்கு தெரிவான யாழ் இந்து மேசைப்பந்தாட்ட அணி யூனியன் கல்லூரியுடன் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திக்கு தெரிவானது.

இறுதி ஆட்டத்தினை சிறப்பாக ஆடிய இந்து அணி யாழ் மத்திய கல்லூரியை வீழ்த்தி முதலிடம் பெற்று வெற்றிவாகை சூடியது.

இவ் அணி தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(கு-23)



# ஸ்ரீ காமாட்சியை வீழ்த்தியது குருநகர் கார்மேல் போய்ஸ்

ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது குருநகர் கார்மேல்போய்ஸ் அணி.

கிறிங்கிங்ஸ் சனசமூகத்தினால் நடத்தப்பட்ட 6 பேர் 5 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி 49 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி அணி 20 ஓட்டங்களை பெற்று தோல்வி அடைந்தது. (கு)

# இன்றைய போட்டிகள்

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள போட்டிகள் வருமாறு,

மாலை 5.50 மணிக்கு கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இருதயராஜா விளையாட்டுக் கழகமும் மாலை 6.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.மேரிஸ் பீ விளையாட்டுக்கழகமும் இரவு 7.10 மணிக்கு அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு-23)







மாகாணமட்ட போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற [illegible] 18 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி வீரர்கள் அண்மையில் கௌரவிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜீரியாவை வென்றது பெல்ஜியம்



உலகக் கிண்ண கால்பந்து லீக் போட்டியில், திடீரென எழுச்சி பெற்ற பெல்ஜியம் அணி, 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிரேசில்நடக்கும்உலகக் கிண்ண தொடரின் எச பிரிவு லீக் போட்டியில், அல்ஜீரியா, பெல்ஜியம் அணிகள் மோதின.

போட்டியின் 25-வது நிமிடம், கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில், பெகவுலி முதல் கோல் அடிக்க, முதல் பாதியில் 1:0 என, அல்ஜீரியா முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் மாற்று வீரராக களமிறங்கிய 5-வது நிமிடத்தில். பெல்லெய்னி (70-வது நிமிடம) தனது தலையின் பின்புறமாக முட்டி கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய இந்த அணிக்கு மெர்ட்டென்ஸ் 80-வது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க, 2:1 என, முன்னிலை பெற்றது பெல்ஜியம். முடிவில், பெல்ஜியம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# ஆஸியுடன் இணைந்தார் முரளி



அவுஸ்திரேலியா அணியின் பந்து வீச்சு ஆலோசகராக முத்தையா முரளிதரன் இணைக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடருக்கே இவர் குறித்த பதவிககு நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட்டின் உண்மையான, அதி சிறந்த ஈடுபாடு கொண்டவர் முரளி. அவர் மூலம் இந்த தொடரில் அவுஸ்திரலியா அணி மிகச் சிறந்த பெறு பேற்றை பெற்றுக் கொள்ளும். ஆடுகள நிலைமைகளை நன்கு உணர்ந்து, அறிந்து கொள்ளும்ஒருவர். அவர் தனியே சுழல் பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சி வழங்கு வது மட்டுமல்லாமல் பாகிஸ்தானின் பயங்கரமான சுழல் பந்து வீச்சாளர்களை எவ்வாறு துடுப்பாட்ட வீரர்கள் சந்திப்பது என்பதையும் அறிந்து கொள்ள முடியும் என அவுஸ்திரேலியா அணியின் பயிற்றுவிப்பாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

இந்த வாய்ப்பு வழங்கப்படுள்ளதையிட்டு தான் புகழாங்கிதம் அடைவதாகவும், தன்னால் இந்த தொடரில் ஒரு சிறிய முன்னேற்றத்தை அவுஸ்திரேலிய அணிக்கு வழங்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள முரளி, ஆடுகள நிலைமைகள் தனக்கு தெரியும் எனவும் அதற்கான நுட்பங்களை சுழல் பந்துவீச்சாளர்களுக்கு வழங்க முடியும் எனவும் முரளி தெரிவித்துள்ளார்.

அத்துடன் சயீட் அஜ்மல் உலகத்தின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்தும் மிகச் சிறந்த பந்து வீச்சாளர்.

அவருடைய பந்து வீச்சு என்னுடைய பாணியில் இருப்பதனால் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் எனது பந்துக்கு பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் சிறப்பாக துடுப்பாடுவார்கள் எனவும் முரளி தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்கள்...

தெரிவிக்கப்படுகின்றது.

அளுத்கம - பேருவளை வன்முறை சம்பவத்தை கண்டித்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்பான குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யுமாறு அரசை வலியுறுத்தியும் இன்று வியாழக்கிழமை நாடு பூராகவும் சமூகப்பற்றுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஹர்ததாலை அனுஷ்டிக்குமாறு முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்தோடு இதனை முன்னிட்டு அனைத்து வீடுகளிலும் கறுப்புக் கொடியை தொங்கவிடுமாறும் வேண்டப்பட்டுள்ளதுடன் நல்லாட்சியை விரும்பும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கோரியுள்ளது.

இந்நிலையில் இந்த வேண்டுகோளை ஏற்றும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துமே ஹர்த்தால் அனுஷ்டிக்க யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் முன்வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (செ-6)

## கருங்கல் சுரங்கங்களை...

மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மக்கள் சந்திப்புக்காகச் சென்றிருந்தபோதே பன்றிவெட்டிக் கருங்கற் சுரங்கங் களுக்கும் சென்று அவதானித்துள்ளனர்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகத்தால் 12 மீற்றர் ஆழத்துக்கு மாத்திரமே கல் அகழலாம் என அனுமதிக்கப்பட்டபோதும், பல இடங்களில் 16 மீற்றர் ஆழத்துக்கும் அதிகமாகக் கல் உடைக்கப்பட்டிருப்பது இதன் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவருடன் கூடவே சென்றிருந்த வடமாகாண சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் அனுமதிக்கப்பட்ட ஆழத்துக்கு மேலதிகமாக அகழப்படுவதைத்தடுத்து நிறுத்த உடன் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

கல்லுடைக்கும் நிறுவனங்கள், கல் உடைப்பதால் ஏற்படும் பாரிய குழிகளை நிரப்பி அப்பிரதேசத்தில் மரங்களை வளர்த்து மீள்வனமாக்கலை மேற்கொள்ளவேண்டும் என்பதே வழமையான நடைமுறையாகும்.

ஆனால், இயன்றவரையில் கற்களைத் தோண்டியெடுத்துக் காசாக்கும் நிறுவனங்கள் சுரங்கங்களை மீளவும் நிரப்பி மூடுவதற்குச் செலவழிக்க விரும்புவதில்லை.

மேற்குறிப்பிட்ட சுரங்கங்களிலும், உள்ளே சேர்ந்திருக்கும் தண்ணீரைச் சாட்டாக வைத்து அதில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்க்கவும் அல்லது கழிவுகளைக் கொட்டும் இடமாகப் பயன்படுத்தவுமே கல் அகழும் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

ஆனால், இரண்டுமே அப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலை மோசமாகப் பாதிக்கும் எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலனிடம் சுரங்கப்பகுதிகளில் மீள்வனமாக்கலைத் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனப் பணித்துள்ளார்.

மேலும், வளங்களைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் ஈட்டும் தென் இலங்கை நிறுவனங்கள், தமது வருவாயில் எவ்வளவு தொகையை வடக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியுள்ளது என்பது தொடர்பான விபரங்களைத் தமக்குத் தருமாறும் பொ.ஐங்கரநேசன் பிரதேசச் செயலரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கருங்கல் சுரங்கங்களைப் பார்வையிட்ட குழுவில் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், உள்ளுராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் மற்றும் துணுக்காய் பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோரும் இடம்பெற்றி ருந்தனர். (செ-6)

## ஐ.நா உதவிச் செய...

கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கும்படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துவதே இவரது விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரசதரப்பு மற்றும் எதிரக் கட்சி அரசியல் தலைவர்களைச் சந்தித்து இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து இவ்விவகாரம் தொடர்பில் இவர்கள் விரிவாகப் பேசுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை அளுத்கம மற்றும் பேருவெள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பிரிவில் பணியாற்றும் தெற்காசியாவுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அதுல் கேசாப்பும் இவ் வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## யாழ்.பல்கலையில் இன்று...

யுத்தத்தையும் எதிர்கொண்டது கொடிய யுத்தத்தின் வடுக்கள் மாறாத நிலையில் யுத்தத்திற்கான காரணங்கள் களையப்படாமல் இருக்க தற்போது இன முரண்பாட்டை தூண்டக்கூடிய பல சம்பவங்கள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது எமக்கு மிகவும வேதனை தருகின்றது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் தம்புள்ள மற்றும் கிராண்பாஸில் முஸ்லிம் மககளின் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, அம்பாந்தோட்டையில் கிறிஸ்தவ தேவாலயம் தாக்கப்பட்டமை மற்றும் மட்டக்களப்பில் இந்து ஆலயம் தாக்கப்பட்டமை என இப் பட்டியல் நீண்டு செல்கிறது.

இதன் ஓர் அங்கமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அளுத்கம பிரதேசத்தில் தொடங்கிய தாக்குதல்கள் ஏனைய இடங்களுக்கும் பரவி முஸ்லிம் வீடுகள், கடைகள் எரித்து நாசமாக்கப்பட்டதுடன் தற்போது மூவர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிப்பது வேதனைக்குரியது.

இக் கொடூர சிறுபான்மை இனத்தற்கெதிரான வன்முறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மிகவும் வனமையாக கண்டிக்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்திலும் உலக மயமாக்கத்தின் விரிவாகத்திலும் உலக மக்களுடன் சகோதரத்துவத்தில் வாழ்கின்ற இந்த யுகத்தில் பல் நெடுங்காலம் ஒரே நாட்டில் வாழ்ந்து வருகின்ற சிறுபான்மை மக்களுக்கு எதிரான இந்த மனித நாகரிகமற்ற கொடூரமான வன்முறைகள் மிகவும் கண்டிக்கத்தக்கன.

ஒரு சிலர் தங்களுடைய நலன்களை பாதுகாப்பதற்காக இவ்வாறான இன,மத முரண்பாட்டு நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக பின புல ஆதரவு வழங்குவது நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டிச் செல்லும் எனவே இனமத மொழி வேறுபாடுன்றி இவ்வாறான நாகரிகமற்ற வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என எமது சங்கம் வேண்டிக்கொள்கிறது.

இச் சம்பவத்துக்கு எதிராக இன்று நடை பெறுகின்ற ஹர்த்தாலுக்கு எமது சங்கம் பூரண ஒத்துழைபை வழங்குவதுடன் இன்று 19ஆம் திகதி நண்பகல் 12-1 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் கடந்த 15-ம் திகதி தொடக்கம் 3 தினங்கள் நடைபெற்றிருக்கின்றது. இதில் 3 மாத குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 80றகும் மேற்பட்டவர்கள் காயமடைந்தும், பல லட்சக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டும் உள்ளன.

இந்நிலையில் மிக மோசமானதும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கும் வகையிலும் அமைந்திருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளுதல வேண்டும். போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரையில் குறித்த போராட்டம், பல்கலைக்கழக வளாகத்திற்குள் நடத்தப்படும்.

இதில் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியரகள்என அனைவரும்கலந்துகொள்ளுமாறு கேட்கப்படு கின்றனர் என அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## சிறுபான்மையினரை...

கொண்டு அதற்குப் பொறுப்பான வரகளை நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த வன்முறைகளைக் கைவிடுமாறும், நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறும், சட்டத்தின் ஆட்சியை மதிக்குமாறும் அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்பகுதியில் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்து இடம்பெறுவது தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்களும, அமைப்புகளும் கவலை வெளியிட்டுள்ளன.

இந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அரசாங்கம் ஊரடங்குச்சட்டத்தை நடைமுறைப்படுத்திய போதிலும், முஸ்லிம் ஒருவரின் பண்ணை மீது 16ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெலிப்பன்னவிலும் பொலிஸார் மறறும் படைத்தரப்பினரின் முன்பாகவே தம்து வீடுகளும், வியாபார நிலையங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டதாக அங்குள்ள முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வன்முறைகள் குறித்து விசாரணைகளை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன நிறுத்துமாறு டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராநதியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கை அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (செ-11)

## முஸ்லிம் பிரதேசங்...

சோடிக் காணப்பட்டன.

முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் நேற்றையதினம் கடையடைப்பு மற்றும் ஹர்ததால் அனுஷ்டிப்பதற்கான அழைப்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் உலமா சபை ஆகியவற்றால் கூட்டாக விடுக்கப்பட்டிருந்தது.

பொது பல சேனாவினால் முன்னெடுக்கப்படுகின்ற இன ரீதியான நடவடிக்கையில் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் பொருளாதாரத்தையும் இழந்து, நிர்க்கதியாகி, பதற்றத்துடனும் பீதியுடனும் வாழும் தமது சகோதரர்களுக்காக இன்று (நேற்று) துக்கம் அனுஷ்டிதது விஷேட பிரார்ததனைகளிலும் ஈடுபடுமாறு அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள்சம்மேளனம்மற்றும் உலமா சபை ஆகியன கூட்டாக இது தொடர்பில் விடுத்த அறிவித்தலில் முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைக்கண்டித்து நாளை 20 ஆம் திகதி யாழ். நகரில் மத்திய பேருந்து நிலையம் முன்பாக போராட்டம் ஒன்றினை தமிழ்தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுடன் பேசியிருக்கின்றோம். அவர்களும் மேற்படி போராட்டத்திற்கு ஆதரவினை தெரிவித்திருக்கின்றார்கள்.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைந்து கூட்டாக இந்தப்போராட்டத்தை ஒழுங்கமைத்திருக்கின்றோம். இதற்கமைவாக நாளை 20-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் நடத்தப்படும். மேலும் இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள முஸ்லிம் தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நாங்கள் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம் அதன்படி அவர்கள் ஆதரவு வழங்குவார்கள்.

மேலும் அளுத்கம பகுதியில் நடைபெற்றிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை வெறுமனே இனவாத அமைப்புக்களால் நடத்தப்பட்ட ஒரு வன்முறைச் சம்பவமாக பார்க்க முடியாது. இது தமிழ்தேசத்திற்கு எதிராக கடந்த 65வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநீதிகளின் ஒரு கட்டமாகவே நாங்கள் பார்க்கவேண்டியிருக்கின்றது.

2010-ம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உருவாக்கப்பட்டு நாம் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டிருந்தபோது நாங்கள் ஒரு விடயத்தை எதிர்வு கூறியிருந்தோம். அதாவது தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் வரவேண்டும். அல்லது போனால் தமிழ்-முஸ்லிம் இனங்களை பிளவுபடுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படும்.

மேலும் முள்ளிவாய்க்காலில் தமிழ்தேசத்தின் முதுகெலும்பு உடைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தப் பெருமிதத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் சிங்களதேசம் திரும்பும். நன்கு திட்டமிட்டவகையில் அழிப்பினை நடத்தும் என கூறியிருந்தோம்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் நிலையில் அந்த மக்களை குறிவைத்து அரசினாலும், அதன் ஒட்டுக்குழுக்களினாலும், அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் கடந்த காலத்தில் உருவாகியிருக்கும் விரிசல் நிலையினை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மறுபக்கம் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடமாகாணத்தில் முஸ்லிம் மக்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதேபோன்று தென்னிலங்கையில் பொருளாதார ரீதியாக முஸ்லிம் மக்கள் ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில் 83-ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களின் பொருளாதார பலத்தை அழித்ததைப் போன்றே இன்றைக்கு முஸ்லிம் மக்களுடைய பொருளாதார பலத்தை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே இவ்வாறான இனவாத நடவடிக்கைகளை நாம் கண்டுகொள்ளாமல் விடுவோமேயானால், கடந்த 65வருடகாலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் இருந்து எந்தவொரு பாடத்தினையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை என்பதே அதன் அர்த்தமாக இருக்க முடியும். எனவே தமிழ் முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து தமிழ்பேசும் ஒரு சக்தியினை உருவாக்கவேண்டிய காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். என்றே நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலமாக மாத்திரமே இலங்கை தீவை தனியே சிங்கள பௌத்த தேசமாக மாற்ற நினைக்கும் அரசாங்கத்தின் அல்லது அதன் ஒட்டுக்குழுக்களின் திட்டத்தை நாங்கள் முறியடிக்க முடியும். மேலும் நாங்கள் பாதிக்கப்படும்போது அல்லது நாங்கள் நொந்து கொண்டிருக்கும்போது எமக்கு ஒத்துழைப்பாக எவரும் செயற்பட்டிராத நிலையில்.

அது எமக்கு குற்றமாக தெரிந்திருந்தது. இந் நிலையில் எம்மைப்போன்றே மற்றொரு தரப்பு பாதிக்கப்படுகின்றபோது நாம் அதற்கு ஒத்துழைப்பினை வழங்காமல் இருப்பது நாம் கடந்த காலத்திலிருந்து அல்லது எங்களின் கசப்பான அனுபங்களில் இருந்து நாங்கள் எந்தவொரு பாடத்தையும் அல்லது அனுபவத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதையே அடையாளப்படுத்தி காண்பிக்கும்.

எனவே இவற்றினடிப்படையிலேயே நாளை 20ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டத்திற்கான அழைப்பினை நாங்கள் விடுத்திருக்கின்றோம என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் பங்கு கொண்டிருந்தார். (செ-4.6)

## ஐ.நா...

வாய்க்கிழமையும் நடைபெற்றது. இரண்டு நாடகள்விவாதத்தின்பின்னர்பிரேரணை நேற்று மாலை 6.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளான அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன வெளிநடப்புசெய்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10பேர் மட்டும் எதிராக வாக்களித்தனர். 33 உறுப்பினர்கள்அவைக்கு நேற்று சமுகமளித்திருக்கவில்லை.

இதன்பிரகாரம் பிரேரணைக்கு ஆதரவாக 144 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் கிடைத்தன. இதனடிப்படையில் ஐ.நா. குழுவை நாட்டிற்குள் அனுமதிப்பதில்லை என்ற பிரேரணை 134 மேலதிக வாக்குகளினால நிறைவேற்றப்பட்டது.(செ-11)


# தென்னிந்திய யாத்திரை

நாட்கள் 12. யாத்திரிகர் 10

ஆரம்பம்: 05.07.2014 To 16.07.2014

தரிசிக்கும் ஆலயங்கள்:-

திருச்சி உச்சிப்பிள்ளையார், பிரம்மாகோவில், திருப்பதி, மதுரை மீனாட்சி, தஞ்சை பெருங்கோவில், கும்பகோணம் 9 நவக்கிரக ஆலயங்கள், வைரவன்பட்டி பைரவர், பஞ்சபூதத்திருத்தலங்கள், பொற்கோவில், ஸ்ரீரெங்கம், மேல்மருவத்தூர், காஞ்சிபுரம், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம் உட்பட 45ற்கும் மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

இத்துடன்,

பாடசாலை விடுமுறையை அனுசரித்து மாணவர்கள், ஆசிரியர்களுக்காக கல்விக்குரிய முக்கிய ஆலயங்களும் சேர்க்கப்படவுள்ளது.

ஆரம்பம்: 05.08.2014. திகதியில் மாற்றம் வரலாம்.
(1 நாள், 2 நாள்)

மேலதிக விபரங்களுக்கு:-

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
T:P:-0777680102

(சீ-7689)



## மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு - மதுரை | -16500 | RTN |
| கொழும்பு - சென்னை | -21900 | RTN |
| கொழும்பு - திருச்சி | -22400 | RTN |
| கொழும்பு - டோகா | -26000 | O/W |
| கொழும்பு - பெங்களூர் | - 27600 | RTN |
| கொழும்பு - மலேசியா | -30000 | RTN |
| கொழும்பு - சிங்கப்பூர் | -30200 | RTN |
| கொழும்பு - பிரான்ஸ் | -45500 | O/W |
| கொழும்பு - லண்டன் | -44800 | O/W |
| கொழும்பு - சுவிஸ் | -83500 | RTN |
| கொழும்பு - கனடா | -105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்



Spot Admission 22.06.2014

# Study in Europe (Latvia)

மிகக் குறைந்த கட்டணத்தில்
மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்
with work Permission

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்! உங்கள் வருகையை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்

நீங்கள் ஏன் Latvia இனை தெரிவுசெய்ய வேண்டும்

- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம்
- A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Schengen visa (Schengen countries இல் உள்ள 25 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்.
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி.

(சீ-7697)

EXPONET Overseas Consultants

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான LatviaStudent Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 7538395 | 021 2227230 Web: www.expogroup.lk



# யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் ஆனி மாத சிறப்புப் பூஜையும்





இடம் : திவ்வியஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 22.06.2014.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி

வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் ஆனி மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில். சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

(6791)

யாழ் தொடர்புகளுக்கு 077 6993861, 07798...



கட்டார் நாட்டில் அதிக உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| Waiter (Restaurant) | Qr.1100 + Food + OT |
| Waiter Helper | Qr.900 + Food + OT |
| Cleaning | Qr.900 + OT |
| Home Decorate Helper | Qr.900 + OT |
| Mason (Experience) | Qr.1500 + OT |
| AC Technician (Experience) | Qr.2000 - 3000 + OT |
| Tinkering | Qr. 1800 + OT |
| Electrician (Experience) | Qr. 1500 + OT |
| Steel Fixer | Qr. 1200 + OT |
| Coil சுற்றுபவர் | Qr. 1500 + OT |
| Cushion Worker | Qr. 1200 + OT |
| Marble Fixer | Qr. 1500 + OT |
| AutoCAD | Qr. 2000 - 2500 + OT |

மேற்குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன. தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம் கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம் எதிர்வரும் 22ம் திகதி கட்டார் நாட்டவர்களால் (அரபிக் காரர்களால்) நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணம் Green Grass Hotel ல் நடைபெறவுள்ளது.

கடவுச்சீட்டு, Passport Size Photos 8, சுயவிபரக்கோவை மற்றும் அனுபவ சான்றிதழ் என்பனவற்றுடன் எதிர்வரும் 22ம் திகதி காலை 9 மணிக்கு நேரில் வரவும்.
உடன் தொடர்பு கொள்ள.

Lanka Voice : 0779527575 / 0766697789

Air Trust,
(Government Approved Human Resource Consultants)
S.L.B.F.E (Licene No.2490)
No.945, Maradana Road, Colombo - 08

(சீ-7694)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.